DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524

PYRAMID GROUP
வீடு வாங்க விற்க!
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
ROYAL LEPAGE ignite

FIRST MORTGAGE
SECOND MORTGAGE
REFINANCE
SUJAN SIVARAJAH 416.302.5555

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1575 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 12, 2026

# "பாட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டமும்"

## சங்கீத்சன் என்னும் பாடகரை கைது செய்த அரசு தரப்பு பொலிஸ். அதன் மூலம் அவரை முன்பைவிட அதிகமாகப் பிரபல்யப்படுத்தியிருக்கிறது என்பதே நிதர்சனம்!

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்!

தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தை மகிமைப்படுத்தும் பாடல்களைப் பாடியதற்காக சங்கீத்சன் கைது செய்யப்பட்டதாக போலீஸ் தரப்பு தெரிவிக்கின்றது.ஆனால் அவரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை முன்பைவிட அதிகமாகப் பிரபல்யப்படுத்தியிருக்கிறது.குறைந்தளவு பிரபல்யத்தோடு பாடி வந்த ஒரு பாடகரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை இலங்கை முழுவதும்,அதற்கப்பாலும் பிரபல்யப்படுத்தியிருக்கிறது.இதை அதன் தர்க்கபூர்வ வார்த்தைகளில் சொன்னால்,அவர் பாடிய அரசியலையும் கவனிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது் பேசுபொருள் ஆக்கியிருக்கிறது.அதன் தக்கபூர்வ விளைவாக மகிமைப்படுத்தியிருக்கிறது. எந்த அரசியலை மகிமைப்படுத்தியதற்காக அவர் கைது செய்யப்பட்டாரோ,அதே அரசியலை அவருடைய கைது பிரபல்யப்படுத்தியிருக்கிறதுகவனிப்புக்குரியதாக மாற்றியிருக்கிறது் மகிமைப்படுத்தியிருக்கிறது. (தொடர்ச்சி 8ம் பக்கம்)




# "தொழில்நுட்ப வளர்ச்சியால் அச்சு ஊடகங்கள் மங்கிச் செல்கையில், கனடாவில் "உதயன்" ஊடகம் தொடர்ந்து 30 ஆண்டுகளாக சேவையாற்றுவது சாதனையாகும்"

## இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், கனடா "உதயன்" சர்வதேச விருது விழாவில் புகழாரம்

"இன்றைய சூழலில் கையில் கைப்பேசி வைத்திருக்கின்ற அனைவரும் ஊடகவியலாளர்களாக மாறியுள்ள சூழலில் அச்சு ஊடகங்கள் கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியால் அச்சு ஊடகங்கள் மங்கிச் செல்லும் காலகட்டத்தில், கனடாவில் "உதயன்" போன்ற ஊடகங்கள் தொடர்ந்து 30 ஆண்டுகளாக சேவையாற்றுவது அளப்பரிய சாதனையாகும். இது கனடியத் தமிழ் சமூக வரலாற்றின் முக்கிய அத்தியாயமாகும்" அத்துடன் கனடியத் தமிழர்களின் ஒரு அடையாளமாகவும் "உதயன்" பத்திரிகை திகழ்வதை நான் உணர்கின்றேன்"

இவ்வாறு இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன், கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "உதயன்" சர்வதேச விருது விழாவில் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார் மேற்படி விழாவில் அவர் உரையாற்றும்போதே அவர் உதயன் பத்திரிகையையும் பாராட்டினார். கனடாவில் 30 ஆண்டுகளாக ஊடகப் பணியாற்றி வரும் உதயன் ஊடகக் குழுமத்தின் நிகழ்வுகளில் பங்கேற்பதை மகிழ்ச்சியான பொழுது ஒன்றாகக் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



COMMERCIAL REAL ESTATE
BUY · SELL · LEASE
Sri Nada
Real Estate Broker
416-276-6666
RE/MAX ACE
Let's Talk Strategy.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில் எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 (Cell)
1-833-SMART 09 (Office) (76278)

G.Rajah
முள்ளிவாய்க்காலில் இருந்து...
NAM THAYAGAM
நம் தாயகம் INC
Nam Thayagam Inc.
3031, Markham Road, Unit #35, Scarbrough, ON M1X 1L9
namthyakam@gmail.com
416 558 2111





## Carefirst Family Health Team

### Accepting New Patients
### புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






நீங்கள் விரும்பும் HONDA வாகனங்களை ரமணன் திரு என்னும் விற்பனை முகவரோடு தமிழில் உரையாடி வாங்கலாம்







We acknowledge the financial support of the Government of Canada




# அரசியல் அனாதைகளாகிவிட்டவர்கள் போன்று, தமக்காக குரல் கொடுக்கக்கூடிய தலைவர்கள் அற்ற சமூகமாக அவதியுறும் எம் தாயக மக்கள்!

எமது மக்கள் மறந்து போய்விட்ட ஒரு விடயம் எம் மனதில் தோன்றி விரக்தி போன்ற உணர்வை ஏற்படுத்தியதால் இவ்வாரக் கதிரோட்டத்தில் அதனை உள்ளடக்கலாம் என்ற எண்ணத்தோடு அதற்குள் கவலைக-ளுடன் நுழைகின்றோம். எமது தாயகம் பற்றிய சிந்தனையோடு நாம் ஒரு சில மணித்தியாலங்களை கழித்தோமானால் அவ்வாறு தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றவர்களுக்கு எமக்கு ஏற்பட்டது போன்று விரக்தி நிலைக்கு அவர்கள் மனங்கள் தள்ளப்பட்டுவிடும் என்பதை நான் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.
எம் மண்ணின் மக்களில் சுமார் ஒரு மில்லியனுக்கு மேலான மக்கள் தாய் மண்ணை விட்டு நீங்கிவிட, எஞ்சியிருக்கும் .இரண்டு மில்லியன்
வரையிலான மக்களின் வாழ்க்கை எவ்வாறு உள்ளது? தற்போது மாணவர்களாக விளங்கும் அந்த பராயத்தில் உள்ளவர்களில் எத்தனை வீதமுஜடுயவர்கள் மூன்று நேரமும் வயிறார உணவருந்துகின்றார்கள்? அந்த வயதிற்கும் அடங்கும் பெண் பிள்ளைகள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சனைகள் எவை? போதைப் பொருள்? ஆபாச ஊடகங்களை கைததொலைபேசி வரைக்கும் அனுப்பிவைத்து சமூகத்தை சீரழிக்கும் சமூக விரோதிகளை யார் கட்டுப்படுத்துவது? தங்பொது பல்கலைக் கழகங்களில் கற்று வரும் மாணவ மாணவிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் எவை? அவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடித்த பின்னர் அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்கள் தயாராக உள்ளனவா? பட்டப்படிப்பை முடித்தவர்களில் சிலர் தொழில் கிடைக்காத விரக்தியில் தற்கொலை செய்த சம்பவங்களை எமது சமூகம் எப்படிப் பார்க்கின்றது?இந்தப் பிரச்சனைகளை நாம் வாக்களித்து பாராளுமன்றம் அனுப்பிய தமிழ்க் கட்சிகளுடைய பாராளுமன்ற உறுப்பினர்களோ அன்றி அரசாங்கக் கட்சியின் சார்பில் தமிழர் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு எம் மக்கள் அனுபவிக்கும் சவால்கள் நிறைந்த வாழ்க்கை பற்றி எவ்வாறு உள்ளது? நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக தென்னிலங்கைச் சிறைகளில் வாடும் தமிழ் பேசும் அப்பாவிகளின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகின்றது? அவரிக-ளின் சிலர் சிறைக்குள்ளேயே இயற்கை மரணம் அடைந்த சம்பவங்கள் எமது மக்கள் அல்லது எமது தலைவர்கள் என்ற பெயரில் பாராளுமன்றக் கதிரை-களை "அசிங்கப்படுத்துகின்றவர்கள்" யாராவது கவலைப்பட்டார்களா? அ்னறி கண்ணீர் விட்டார்களா? அன்றி கவலைப்பட்டார்களா? மலையகத்தில் எத்தனை ஆண்டுகளாக "மந்தைகள்" போன்று தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திவர தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்து பின்னர் அரசியலுக்குள் புகுந்து தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொண்ட அரசியல்வாதிகள் தொழிலாளர் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றி கவலைப் படுகின்றார்களா? போன்ற கேள்விகளை உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள்.

நாம் முன்வைத்த மேற்படி வினாக்கள் எம்மில் பலருக்கு வேதனைகளையே தோற்றுவிக்கும் என்பது உறுதியே! அப்படியானால் நாம் ஒரு சமூகமாக என்ன செய்யலாம். மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் பின்னர் தோல்வியடைந்தவர்களும் அவ்வாறான பதவிகளை மீண்டும் தமதாக்கிக் கொண்டு ஏற்கெனவே அனுபவித்த சுகபோகங்களை மீண்டும் அனுபவிக்கத் துடிக்கின்றார்கள். முன்னர் அரசியல் பதவிகளில் இருந்ததால் பெற்ற சலுகை-ளான மதுபான லைசென்ஸ் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி லைசன்ஸ்கள் போன்றவற்றை கட்டிக்காப்பதற்காகவும் துடிக்கின்றார்கள்.
இவர்களில் பலர் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்று "கோசம்"எழுப்புகின்றவர்கள் உண்மையிலேயே மக்களுக்கு சேவையாற்றத்தான் இவ்வாறு துடிக்கினக்றார்களா என்றால் அது "இல்லை" என்ற பதிலையே எமக்குத் தரும்

இவ்வாறான நேரத்தில் நாம் மற்றுமொரு கேள்வியை எம் முன்வைப்போமானால் அதற்கும் திருப்திகரமான பதில் எமக்குக் கிட்டப் போவதில்லை.நாம் பெயர் சொல்லி திருப்திபடுவதற்குரிய ஒரு தலைவரின் பெயரை யாராவது கூற முடியுமாக என்றால் அதற்காகவும் நாம் பல மணிநேரம் யோசிக்கவே வேண்டும். தற்பொது யாழ்ப்பாண சிறைச்சாலையில் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சொல்லிசை கலைஞர் சங்கீதனை, சட்டத்தரணியும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கொள்கை பரப்பு செயலாளருமான நடராஜா காண்டீபன் 3ம் திகதி அன்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
குறித்த பாடகர் தாயக எழுச்சிப் பாடலை தனக்கு பிடித்தது போன்று பதிவு செய்து தனது தளத்தில் பதிவிட்டதாக தெரிவித்தே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்போது பாடகர் சங்கீதன், தனது விடுதலை தொடர்பாக தாயாருடன் தொடர்புகொண்டு கலந்துரையாடி நடவெடிக்கை எடுக்குமாறு தன்னைச் சந்தித்த சட்டததரணி நடராஜா காண்டீபன் அவர்களிடம் வேண்டிக் கொண்டதாக தகவல்கள் வெ ளியாகியுள்ளன. அவர் பெயர் சொல்லி நம்பிக்கை வைக்கவுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அற்றவர்களாக எமது மண்ணில் மக்கள் திண்டாடுகின்றார்கள்.
தமிரசுக் கட்சி சார்பிலோ அன்றி அசாங்க கட்சியின் சார்பாக வடக்கு கிழக்கில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ அவ்வறான உதவிகளைச் செய்வதற்காக தாங்கள் தெரிவு செய்யப்பட்டோம் என்று எண்ணுவதில்லை. அரசாங்கக் கடசி சார்ந்த எம்பிக்கள் தங்கள் பிரமிப்பிலிருந்து இன்னும் மீண்டு வராதவர்களாக கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள்.
ஆனால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களோ அன்றி நடராஜா காண்டீபன் போன்றவர்களோ இவ்வாறான முயற்சிகளில் சோர்வின்றி செயற்படுவதை நாம் அவதானிக்க முடிகின்றது.இன்னொரு பக்கத்தில் சிறைக்கூடங்களில் அன்றாடம் செத்துக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரமானது மனிதாபிமான அடிப்படையில் ஆற்றவேண்டிய முதன்மைக் கருமமாகும் என்பதை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனை எமது மக்கள் பிரதிநிதிகள் புரிந்த கொண்டதாகத் தெரியவிலிலை அவசரகால மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 11 முதல் 25 வருடங்களாக தென்னிலங்கை சிறைச்சாலைகளில் சூழ்நிலைக் கைதிகளாக தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிக-ளுள், கொழும்பு புதிய மகஸீன் சிறைச்சாலையில் - 40 பேரும், அனுராதபுரம் சிறைச்சாலையில் - 26 பேரும், வெலிக்கடை ஆண்கள் சிறைச்சாலையில் - 03 பேரும், மகர சிறைச்சாலையில் - 02 பேரும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் - 02 பேரும்,வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலையில் - ஒருவரும், கண்டி தும்பறை சிறைச்சாலையில் - ஒருவரும்,கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் - ஒரு-வரும், களுத்துறை சிறைச்சாலையில் - ஒருவரும்,பொலனறுவை சிறைச்சாலையில் - ஒருவரும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் - ஒருவரும், என 79 கைதிகள் உள்ளனர்.இந்தக் கைதிகளின் உறவுகள் மற்றும் உறவினர் ஆகியோருக்கு ஆறுதல் தெரிவிக்கக்கூட எமது மக்கள் பிரதிநிதிகளுக்கு நேரம் கிட்டுவதில்லை

அதிகாரத்தில் அமர்கின்ற அரசாங்கங்களும் சரி, அரசியல்வாதிகளும் சரி, அரசியல் கைதிகளை "நாம் படிப்படியாக விடுத்துள்ளோம்" என்ற கூற்றை பாலபாடமாகக் கூறி வருகின்றனர். இது முற்றிலும் தவறானது. சிறைத் தடுப்பில் இருந்து இதுவரை வெளியேறிய அரசியல் கைதிகள் அனைவரும் தனிப்பட்ட ரீதியில் சட்டத்தரணிகளை அமர்த்தி வழக்காடி விடுதலை பெற்ற ஒருசிலரைத் தவிர ஏனையவர்கள் எப்படியாவது விரைவில் விடுதலைபெற்று குடும்பங்களுடன் இணைய வேண்டும் என்பதற்காக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை வலிந்து ஏற்றுக்கொண்டு அதற்கான தண்டனைகளை அனுபவித்தே விடுதலை அடைந்துள்ளார்கள். மேலும், இங்கு எவர் ஒருவரும் அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது
இவ்வாறாக நாம் இ ந்த வாரம் குறிப்பிட்டுள்ள இந்த விவகாரங்களில் தீவிரமாக இறங்கி பணி செய்யக்கூடியவர்களை தயார் படுத்தும் பொறுப்பு எம் தாயகத்தில் உள்ள தமிழ் பேசும் மாணவர்களில் உணர்வுள்ளவர்களிடத்தே உள்ளது என்ற பதிவோடு அடுத்த வாரம் சந்திப்போம்!.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண நீதி மன்றத்தில் சங்கீத்ஷனின் பிணை மனுவை ஆட்சேபித்த தமிழ் பேசும் அரசுத் தரப்பு

## கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில்தான் கோர வேண்டும் என்றும் அவர் நீதவானிடம் தெரிவிப்பு




பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பாடகர் சங்கீத்ஷனை பிணையில் விடுவிக்கக் கோரி அவரின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு 11ம் மதிகதி வியாழன் அன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி சதீஷ்கரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அச்சமயம் அரசு தரப்பில் நீதிமன்றில் முன்னிலையான அரச சட்டத்தரணி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுருப்பவர்களை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விண்ணப்பித்துதான் பிணை பெற முடியும் என்று வாதாடியமையுடன், அது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு தீர்ப்புகள் இருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

ஆயினும், பிந்திய சட்டத் திருத்தத்துக்கு அமைய விதிவிலக்கான சமயங்களில் மேல் நீதிமன்றத்திலும் அந்தப் பிணை அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கீத்ஷனின் சட்டத்தரணி கேசவன் சயந்தன் வாதிட்டார்.

இதனையடுத்து இந்த வழக்கை வரும் 23ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

இந்தப் பிணை கோரும் மனு இன்று யாழ் மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பிணைக்கு விண்ணப்பித்த சட்டத்தரணி கேசவன் சயந்தன் பின்வரும் விடயங்களை மன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

"தவறான விடயத்துக்காகத் தவறான முறையில் சங்கீத்ஷன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார். அந்தவகையில் அவருக்கு அநீதி இழைக்கப்பட்டு, நீதிப் பிறழ்வு இடம் பெற்றுள்ளது. சங்கீத்ஷனின் மூல வழக்குத் தொடர்பான "பி" அறிக்கையில் உள்ள தவறுகள் காரணமாக அவரின் விளக்கமறியல் முற்றிலும் தவறானது. அதனால் அவர் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் நீதிப் பிறழ்வு நீடிக்கின்றது.

இந்த மன்றில் பொலிஸார் தரப்பில் முன்னிலையாக வேண்டியவரும் சட்டமா அதிபரின் பிரதிநிதியுமான அரச சட்டத்தரணி நேரில் பிரசன்னமாகி இருக்கின்ற காரணத்தால், நீதிமன்றக் கட்டளைச் சேவகர் ஊடாக உடனடியாக சட்டமா அதிபருக்கும் பொலிஸாருக்கும் அறிவித்தலை அனுப்பி, வழக்கு விசாரணையை நாளையே நடத்த வேண்டும்." - என்று கோரினார்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி வழக்கை எதிர்வரும் 23ஆம் திகதிக்குத் திகதியிட்டார்.

# மானிப்பாய் பிரதேச சபையின் அங்கத்தவர் ஒருவர் சபையின் நிர்வாக முறைக்கு மாறாக நடந்து கொண்டது கண்டுபிடிபட்டதும் அவசரமாக எழுதப்பட்ட பற்றுச்சீட்டு!

மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரிடம் கட்டணம் அறவிடப்படாமல் மயானத்தில் சடலம் எரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அந்த விடயம் அந்த விடயம் சர்ச்சைக்கு உள்ளான நிலையில் பின்னர் ஒரு மாதத்தின் பின் அவசர அவசரமாக கட்டணம் அறவிடப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரது தந்தையின் சடலமானது விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. ஆனால் மயானத்துக்கான கட்டணம் அறவிடப்படவில்லை.

அந்த மாத சபை கூட்டம் நடைபெற்று, கணக்கறிக்கை அனைத்தும் தயாரித்து முடித்த பின்னர் 5ஆம் மாதத்தில் குறித்த பிரச்சினையானது சர்ச்சைக்குள்ளாகி பேசுபொருளானது. இந்த விடயம் ஏனைய உறுப்பினர்களுக்கு தெரியவந்த நிலையில் உறுப்பினர்கள் இது குறித்து கேள்வி எழுப்ப ஆரம்பித்தனர்.

விடுமுறை தினமாக இருந்தாலும் குறித்த வட்டாரத்தில் உள்ள பொது நூலகத்தில் உள்ள படிவத்தினை வாங்கி நிரப்பிய பின்னர் அங்கு உப பற்றுச்சீட்டு ஒன்று வழங்கப்பட்ட பின்னரே சடலத்தை எரிப்பதற்கான அனுமதி வழங்கப்படும். பின்னர் அந்த வருமானம் பிரதான கணக்கறிக்கைக்கு கொண்டு செல்லப்படும். இது அனைவருக்கும் பொதுவான நடைமுறை. ஆனால் இதனால் நடைமுறை குறித்த உறுப்பினர் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை.

இந்த விடயமானது பூதாகரமாக மாறிய நிலையில் கடந்த 25.05.2026 அன்று அவசர அவசரமாக அந்த உறுப்பினர் அழைக்கப்பட்டு கட்டணம் அறவிடப்பட்டு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது. உறுப்பினருக்கு தனிப்பட்ட முறையில் இந்த விடயத்தில் சலுகை வழங்க முற்பட்டு அது வெளிப்பட்ட நிலையில் இவ்வாறு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதா என உறுப்பினர்கள் கடந்த சபை கூட்டத்திலும் கேள்வி எழுப்பினர்.

வடக்கு மாகாண சபையின், உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள மயானங்களை ஒழுங்குபடுத்தல் தொடர்பான நியதிச் சட்டத்தின் அடிப்படையில் பின்வரும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே சடலத்தை எரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும்.

**(i)** 1.விண்டப்பதாரியின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
2.மரணமடைந்தவரின் பிறப்புச் சான்றிதழ் அல்லது
3.விண்ணப்பதாரியின் விவாகச் சான்றிதழ் அல்லது
4.மரணமடைந்தவர் வசித்த பிரிவின் கிராம சேவகரால் வழங்கப்பட்ட சான்றிதழ் அத்துடன்

**(ii)** மரணமடைந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருந்தால், அத்தகைய விசாரணையை நடாத்திய நீதவான் (அல்லது) பிரதேச தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலும் தகனம் செய்யப்படுதல் ஆகாது. நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணை அதிகாரியினால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கட்டளைச்சட்டத்தின் 41 (8) பந்தியின் கீழ் பூதவுடலைத் தகனம் செய்ய அனுமதியளித்து வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்து பிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ். அத்துடன்

**(iii)** மரணமடைந்தவரின் மரணச் சான்றிதழ்.

ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், பிரதேச தவிசாளர் அல்லது அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் தகன நிலையத்தில் எந்தவோர் பூதவுடலும் தகனம் செய்யப்படுதல் ஆகாது என அந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இவை அனைத்தையும் உதாசீனம் செய்துவிட்டே பிரதேச சபையின் மயானத்துக்குள் அந்த சடலமானது எரிக்கப்பட்ட நிலையில் சர்ச்சை எழுந்துள்ளது.

# யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் சீனாவின் புத்தகக் கண்காட்சியா?

## ஆராய்ந்த பின்னே அனுமதி என யாழ் மாநகர சபையில் தீர்மானம்!




நடைபெறவுள்ள நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் சங்கிலியன் பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புத்தகக் கண்காட்சியில் சீனாவின் வகிபாகம் இருப்பதாக வெளியான செய்தி குறித்து எழுந்த சர்ச்சையை அடுத்து குறித்த புத்தக கண்காட்சிகான அனுமதி வழங்கலை யாழ் மாநகரசபை இடை நிறுத்தியுள்ளது.

முன்னதாக யாழ்ப்பாண. மாநகர சபையின் கடந்த நிதிக்குழு கூட்டத்தின் போது சபையின் ஆணையாளரால் இறுதி நேரத்தில் முன்வைக்கப்பட்ட குறித்த புத்தகக் கண்காட்சி தொடர்பிலான முன்மொழிவு, யாழ்ப்பாணத்தின் கலை கலாசார பண்பாடுகளையும் நல்லூர் ஆலயத்தை பிரதிபலிப்பதாக கொண்டதாகவும், எந்தவொரு பின்னணியும் இல்லாது இருக்குமானால் அதை ஏற்கமுடியும் என குறுத்த முழுவின் உறுப்பினர்கள் கூறிய நிலையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்நிலையில் மறுநாள் யாழ்ப்பாணததிலிருந்து வெளியாகும் இலத்திரனியல் ஊடகம் ஒன்றில் குறித்த புத்தக கண்காட்சிக்காக சீனா முனைப்புடன் செயற்படுவதான கருப்பொருளுடன் செய்தி வெளியிட்டிருந்தது.

இதையடுத்து பூளோக அரசியலில் குறித்த விடயம் சிக்காதிருக்கும் வகையில் அன்றையதினம் சபை அமர்வில், மாநகரின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அவ்விடையம் குறித்து சுட்டிக்காட்டி ஆராயப்பட்ட பின்னரே அனுமதி வழங்க வேண்டும் என பிரஸ்தாபித்திருந்தார்.

குறிப்பாக அண்டை நாடானா இந்தியாவுடன் நெருங்கிய கலை, கலாசாரம் சார் தொடர்புகளை கொண்டுள்ள யாழ்ப்பாணம் வேறு கலாசாரத் தொடர்புடைய ஒரு புத்தக கண்காட்சியை அனுமதிப்பதில் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி குறித்த விடையத்தை ஆராய்ந்த பின்னர் அனுமதி கொடுக்குமாறும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் உறுப்பினர் தர்சானந் - யாழ் வர்த்தக கண்காட்சி இந்தியாவின் பின்னணியில் நடைபெறுவதால் அங்கு சீனாவுக்கு இடம் கிடைக்காமையால் யாழில் ஏதாவது ஓரிடத்தில் தானும் புத்தக கண்காட்சியை நடத்த நினைக்கும் சீனா சங்கிலியன் பூங்காவில் நடைபெற இருக்கும் கண்காட்சியில் மாநகரசபையால் ஏலத்தில் விடப்படும் ஓர் இடத்தை பெற்று நடத்த முயற்சிக்கின்றது என்ற சாரப்பட கூறியிருந்தார்.

இன்நிலையில் ஆணையாளர் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க நினைப்பதாகவும், கூட்டங்களிலும் சபையின் நடவடிக்கைகளிலும் முதல்வருக்கே அதிகாரம் உள்ளது. இது புதிதாக வந்துள்ள ஆணையாளருக்கு சில வேளைகளில் தெரியாதிருக்கலாம். எனவே இந்த விதிமுறைக்கு அவரை செயற்படுமாறு அறிவுறுத்துமாறு முதல்வரால் செயலாளருக்கு அறிவுறுத்தப் பட்டதுடன் குறித்த புத்தக கண்காட்சிக்கான அனுமதி முழுமையாக ஆராய்ந்த பின்னரே வழங்கப்படும் என்றும் அதுவரை எந்த நடவடிக்கைக்கும் அனுமதி வழங்கப்படாதெனவும் தீர்மானிக்கப்படுவதாக முதல்வர் அறிவித்தார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க வலியுறுத்தி சுரேஷ் சலே உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கும் அவரது புதல்வர்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News




உள்நாட்டிலும் உலகெங்கிலும் கடும் விமர்சனங்களை சந்தித்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென்பது, அச்சட்டத்தைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான இலங்கையர்களைக் கைது செய்து, அவர்களை மாதக்கணக்கில், "ஏன் வருடக் கணக்கில்கூட" சிறையில் அடைத்த முன்னாள் புலனாய்வுத் துறைத் தலைவரின் கோரிக்கையாக மாறியுள்ளது.

ஏழு வருடங்களுக்கு வருடங்களுக்கு முன்னர் நூற்றுக்கணக்கானோரை பலியெடுத்த உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான சூழ்ச்சி குற்றச்சாட்டுகளின் பேரில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நூறு நாட்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் துவான் சுரேஷ் சலே, 05-06-2026 அ்னறு (ஜூன் 5) முதல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதான அவரது புதல்வர் கூறுகிறார்.

"அவர் எந்த உணவையும் அருந்தவோ தண்ணீரை பருகவோ மறுத்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்காகவே அவர் இதனைச் செய்கின்றார், CID-இற்குள் அவர் கொடூரமாகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதையும், ஒரு நாயைப் போல நடத்தப்படுகிறார் என்பதைக் காட்டுவதற்காகவுமே அவர் இதைச் செய்கின்றார்," என குஷால் சலே 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று (ஜூன் 7) ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் புலனாய்வுத் தலைவரை, தனது தாயார் மனோரி சலேவுடன் சென்று சந்தித்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் சுரேஷ் சலேயின் புதல்வர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

சுரேஷ் சாலேயின் உடல்நிலை மோசமடைந்து வருவதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்குக் கடிதம் எழுதியுள்ள சட்டதரணி அசித் சிறிவர்தன, முன்னாள் புலனாய்வுத் தலைவருக்கு வைத்திய வசதிகளை ஏற்படுத்தித் தந்து அவரை வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சர்வதேச நீதித்துறை நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

நாட்டில் நீதி கிடைக்காத காரணத்தால், இலங்கை குடிமக்களுக்கு எதிரான அரச குற்றங்களுக்கான குற்றச்சாட்டுகளை சர்வதேச நீதிக்குக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை இலங்கை அரசும் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றன.



# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்ற "பனை வளம்" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வு!



உலகப்பனை தினம் என பனை வள ஆர்வலர்கள் யூன் 6 ஆம் நாள் கொண்டாடியதை ஒட்டி பனை வளம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 10.06.2026 புதன்கிழமை காலை நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அச்சு வேலி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்க முகாமையாளர் கிருஷ்ணன் வரதராஜா அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார்.

கலாசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர் பகீர்த்தனா சிவதர்ஷன் அதிதி அறிமுக உரையாற்றினார்.

தமிழ் இலக்கியங்களில் பனை என்ற பொருளில் ஆசிரிய மாணவி செல்வகுமாரி தியாகராஜா சிறப்புரையாற்றினார். ஆங்கில நெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் பனை வளம் குறித்த விழிப்புணர்வு காணொளியை தயாரித்து திரையிட்டார்.




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "பாடினால் கைது, பேசினால் பயங்கரவாதச் சட்டம், பாடசாலை விளையாட்டுப் போட்டியில் விசாரணை"



## இதுதான் நல்லிணக்கமா என அநுர அரசை தனது கேள்விக் கணைகளால் "துளைத்த" சிறீதரன் எம்.பி.

- ந.லோகதயாளன்

பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடத்தினால் பயங்கரவாத தடைச்சட்டம், பாடினால் பயங்கரவாத தடைச்சட்டம், பேசினால் பயங்கரவாத தடைச்சட்டம், ஒன்று கூடினால் பயங்கரவாத தடைச்சட்டம். இந்த நாட்டிலே நீங்கள் என்ன நல்லிணக்கம் சொல்கிறீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கடும. ஆவேசக் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

8ம் திகதி திங்கட்கிழமை அன்றைய தினம் அவசர கால சட்டத்தை நீடிப்பு செய்வதற்கான பிரேரணையை ஜனாதிபதியினால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சூழலில், இந்த நாட்டிலே பல்வேறுபட்ட துயர நிகழ்வுகளும் துன்பங்களும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த காலகச்சூழல் மிகவும் பயங்கரமானதாக இந்த நாட்டிலே இருக்கின்றது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக கடந்த வாரம் யாழ்ப்பாணத்திலே வைத்து கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கணேஷ்குமார் சங்கீத்சன் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இந்த நாட்டிலே ஒரு பாடல் பாடியதற்காக, ஒரு காலத்தின் செய்தியை கண்ணாடியாக சொல்லுகின்ற ஒரு கலைஞன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார். இது மிகவும் வரலாற்றிலே ஒரு துயரமான சம்பவம்.

இந்த நாட்டில் 78 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் என்பது சிங்கள இளைஞர்களையும் தமிழ் இளைஞர்களையும் மிக மோசமாக பாதித்திருந்தது. இன்று அரசமைத்திருக்கிற ஜே.வி.பி (JVP) / என்.பி.பி (NPP) ஆக இருக்கலாம், அவர்கள் மாற்றம் பெற்றிருந்தாலும் கூட, 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் மிக மோசமாக படுகொலை செய்யப்படுவதற்கும் இந்த நாட்டிலே மிக மோசமாக அழிக்கப்படுவதற்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை அப்போது இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைச் சேர்ந்த ஜே.ஆர். ஜெயவர்தன, பிரேமதாசா போன்றவர்கள் மிக கொடூரமாக அதனை பயன்படுத்தி இருந்தார்கள்.

கொடூரமான இந்த சட்டத்தை நீக்குகிறோம் என்று பலமுறை எதிர்க்கட்சி வரிசையில் இருந்த இன்றைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க உட்பட உங்களுடைய அரசாங்கம் பல தடவைகள் இந்த செய்தியைச் சொல்லியிருந்தார்கள். "நாங்கள் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை உடனே வந்தவுடன் நீக்குவோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு இரண்டு ஆண்டுகள் கடக்கப் போகிறது, இதுவரை இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க ஒன்றுப்பமப்படவில்லை. அதற்கான ஒரு புதிய பயங்கரவாத தடைச்சட்டம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். ஒரு கோடு இருக்கிறது, அதற்கு இன்னொரு பெரிய கோட்டை கீறுகிறீர்களே தவிர, அதனை நீக்குகின்ற நிலையில் இல்லை.

இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாகத்தான் இந்த நாட்டிலே தமிழ் மக்கள் மிகக் கொடுமைகளை சந்தித்தார்கள். 2006 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டு காலங்களில், குறிப்பாக 2006 கிழக்கு மண்ணினுடைய வாகரையிலே நடந்த மிகப்பெரிய இறுதியான இனப்படுகொலைகளும், 2009 ஆம் ஆண்டு வடக்கு மண்ணிலே முள்ளிவாய்க்காலிலே நடந்த இனப்படுகொலைகளுக்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் மிக காரணமாக இருந்தது.

இந்த சட்டத்தை பயன்படுத்தி இன்று கணேஷ்குமார் சங்கீத்சன் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு பாடல் பாடி இருந்தார். இந்த நாட்டிலே பாடுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் இந்த சபையிலே நீங்கள் சொல்ல வேண்டும், பேசுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறதா? தீபச்செல்வன் புத்தகங்களை எழுதியிருந்தார், இந்தியாவிலிருந்து வந்த புத்தகங்கள் சுங்க திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. எழுதுகின்ற உரிமை தடுக்கப்பட்டிருக்கிறது, பாடுகின்ற உரிமை தடுக்கப்படுகிறது, கூட்டம் கூடுகின்ற உரிமை தடுக்கப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை வைத்தே நீங்கள் இதனை செய்கின்றீர்கள்.

அதனை இன்னும் மெருகூட்டுவதற்காக இன்றைய சட்டமூலத்தையும் ஜனாதிபதி தனக்கு இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தி இதனை செய்கின்றார். ஜனாதிபதி ஏன் தனக்கு இருக்கிற அதிகாரத்தை பயன்படுத்தி சங்கீத்சன் ஏன் விடுதலை செய்யவில்லை? தொடர்ந்தும் சங்கீத்சன் என்கின்ற ஒரு சாதாரண இளைஞன், ஒரு பாடகன், ஒரு கலைஞனை விடுவிக்கச் சொல்லி பல இடங்களிலும் மக்கள் போராடுகின்றார்கள். காலை வவுனியாவில், வல்வெட்டித்துறையில், அதற்கு முதல் கிளிநொச்சியில் இன்று பல்வேறு இடங்களில் மக்கள் திரண்டு திரண்டு போராடுகிறார்கள்.

இப்பொழுதும் நான் இந்த இடத்திலே உயர்ந்த சபையிலே சொல்லுகிறேன், நீங்கள் அவர்களை விடுவிக்கவில்லையானால், சங்கீத்சனை உடனடியாக இந்த அரசு விடுவிக்கவில்லை என்றால், வடக்கு கிழக்கு தழுவி ஒரு மாபெரும் போராட்டத்திற்கு மக்கள் தயாராகிறார்கள். இளைஞர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், பேச முடியாமல் இருக்கிறார்கள். அரசு பொறுப்பேற்ற காலத் திலிருந்து அபிவிருத்தி என்ற வார்த்தைகளை நீங்கள் சொல்லிக் கொள்கிறீர்கள், ஆனால் அபிவிருத்தி என்பது நடந்ததாக தெரியவில்லை. கைதுகளும் அடக்குமுறைகளும் இந்த நாட்டிலே மிகக் கோலோச்சி மேலோங்கி இருக்கிறது.

அண்மையிலே யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தினுடைய நீதிபதியாக இருந்த அலெக்ஸ் ராஜா இரண்டு மாதங்களில் திடீரென பதுளை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார். அலெக்ஸ் ராஜா நீதவான் நியமிக்கப்பட்டு அவர் சில வழக்குகளை முன்னிலைப்படுத்துகின்ற பொழுது, நீதியான நீதவான்கள் உடனடியாக கலைக்கப்படுகிறார்கள். இதேதான் முல்லைத்தீவில் இருந்த நீதவான் சரவணராஜா அவர்களுக்கும் நடைபெற்றது. ஆகவே நீங்கள் கொண்டு வருக-ிற சட்டம் மக்களுக்கான சட்டம், நீதிக்கான சட்டம் என்பது நீதித்துறையையே கேள்விக்கு உட்படுத்தி இருக்கிறது.

குருந்தூர் மலையிலே விகாரை கட்ட வேண்டாம் என்று நீதிமன்றம் கட்டளையிட்ட பிற்பாடும், பிக்குமார்களால் அங்கே நீதிமன்ற கட்டளையை மீறி அந்த இடத்திலே விகாரை கட்டப்பட்டது. அரசாங்கத்தினால் இதுவரை அதனை தடுக்க முடிந்திருக்கிறதா? அதனை தடுக்க முயன்ற நீதவானை பழிவாங்கினீர்கள். அவர் நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலைக்கு நீதியரசர் சரவணராஜா நாட்டை விட்டே போனார். யாழ்ப்பாணத்திலே அலெக்ஸ் ராஜா தீர்ப்பு வழங்குகின்ற பொழுது, நீதியை வழங்குகிற பொழுது, நீதிக்குப் புறம்பாக ஒரு கோரமான அகோரமான ஆட்சிக்காக அவரை யாழ்ப்பாணத்திலே இருந்து நீங்கள் மாற்றி இருக்கிறீர்கள். இது ஒரு மிகப்பெரிய வன்முறை.

எனக்கு தெரிந்த அளவிலே யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி மாணவர்கள் ஒரு விளையாட்டுப் போட்டிக்கு சோடனை (அலங்காரம்) செய்திருந்தார்கள். அந்த சோடனைக்காக அந்த பாடசாலையினுடைய அதிபர் வரதன் உட்பட மாணவர்கள், ஆசிரியர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அதேபோலதான் கிளிநொச்சி மாவட்டத்தினுடைய கோணாவில் மகா வித்தியாலயத்திலே விளையாட்டுப் போட்டியிலே சோதனைகள் செய்திருந்த காரணத்தால், அந்த பாடசாலையினுடைய அதிபர் அம்பிகைபாகன் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

ஒரு பாடசாலையின் விளையாட்டுப் போட்டியிலே சோடிக்க முடியாது. பாடசாலை விளையாட்டுப் போட்டி நடத்தினால் பயங்கரவாத தடைச்சட்டம், பாடினால் பயங்கரவாத தடைச்சட்டம், பேசினால் பயங்கரவாத தடைச்சட்டம், ஒன்று கூடினால் பயங்கரவாத தடைச்சட்டம். இந்த நாட்டிலே நீங்கள் என்ன நல்லிணக்கம் சொல்கிறீர்கள்? இங்கே நீதி அமைச்சர் இருக்கிறார், அமைச்சர்கள் இருக்கிறீர்கள். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், இந்த சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நீங்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம்.

கதிர்காமத்து அழகி பிரேமாவதி மனம்பேரி உட்பட பலரை கொன்று நிர்வாணமாக்கி ரோட்டிலே இழுத்துச் சென்று சுட்டு படுகொலை செய்த இந்த நாட்டினுடைய வரலாறு, எங்களுடைய சகோதரிகள், சகோதரர்கள் மிக மோசமாக கொல்லப்படுவதற்கும், இறுதி யுத்தத்தை கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இந்த மண்ணிலே முள்ளிவாய்க்காலில் 4 லட்சம் மக்கள் இருந்த பொழுது 75 ஆயிரம் பேர்தான் இருக்கிறார்கள் என்று கூறி உணவு அனுப்பாமல், மருந்து அனுப்பாமல், கொத்து குண்டுகளையும் பொஸ்பரஸ் குண்டுகளையும் வீசி அந்த மக்களை கொடூரமாக கொலை செய்த அந்த அரசியல் நிலைமை இன்றும் தொடர்கின்றது.

குறிப்பாக, "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்பது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தை நீங்கள் படித்துப் பாருங்கள், அதிலே சில விஷ யங்கள் உண்டு. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். அந்த அரசியல் பிழைத்ததனால் கோட்டாபய இரண்டு வருடங்களிலே வீட்டை விட்டுப் போனார். இந்த நாட்டினுடைய ஆட்சியை விட்டுப் போக வேண்டிய சூழல் அவருக்கு வந்தது. அதேபோலதான் மகிந்த ராஜபக்ஷவினால் திரும்ப வர முடியவில்லை. யோசித்து பாருங்கள்.

ஆகவே நான் மீண்டும் சொல்கிறேன், இந்த மண்ணிலே கணேஷ்குமார் சங்கீத்சனுக்கு நடந்திருக்கிற துயரம் அல்லது தீபச்செல்வனுக்கு நடந்திருக்கிற துயரம், இங்கே தொடர்ந்தும் எத்தனை பேருக்கு நடக்கப் போகிறது? இது ஒரு கட்டியம் சொல்கிறது, முதலாவது ஒரு செய்தியைச் சொல்கிறது - இனிமேலும் இளைஞர்களுடைய சுதந்திரம் அடக்கப்படுகிறது. இதுதான் இந்த நாட்டினுடைய நல்லிணக்கமா? நீங்கள் எப்படி நல்லிணக்கம் கொண்டு போகிறீர்கள்? இரண்டு ஆண்டுகளில் கண்ட முன்னேற்றம் என்ன? இந்த நாட்டினுடைய முயற்சியிலே நீங்கள் கண்ட வெற்றி என்ன?

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இந்த நாட்டிலே இப்பொழுதும் இரண்டு பட்டிருக்கிறார்கள். இரண்டு பேருமே இரண்டு தேசிய இனங்கள்தான். ஆனால் மனோரீதியாக இந்த நாட்டினுடைய தேசியக் கொடிக்கு கீழ் இன்றும் தமிழர்கள் இல்லை என்பதை மிகத் தெளிவாகவே இந்த நாடு சொல்கிறது. அரச பயங்கரவாதம் தலைவிரித்து ஆடுகிறது. அரச பயங்கரவாதத்தினுடைய ஒவ்வொரு செயல்களையும் நீங்கள் எடுத்துச் செய்கிறீர்கள். இதனைத்தான் ஜே.ஆர். ஜெயவர்தன காலம் கூட செய்திருந்தது. ஜே.ஆர் சொன்னார், "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று. சாதாரண நிரபராதிகளாக இருந்த மக்களைப் பார்த்து போரை அறைகூவல் செய்த ஜே.ஆருடைய தொடக்கத்தை இப்பொழுதும் கூட 50 ஆண்டுகள் கடந்து வந்தும் கூட நீங்களும் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை என்றால், இப்பொழுது இருக்கிற நாட்டின் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசும் அதனை கற்றுக் கொள்ளவில்லை என்றால், இந்த நாடு அதள பாதாளத்தில் போய் விழுவதைத் தவிர வேறு எதுவும் நடக்காது.

இந்த நாட்டினுடைய பொருளாதாரம் இன்னும் வளர முடியவில்லை. இந்த நாட்டினுடைய நீதியும் நியாயமும் எல்லா இனங்களுக்கும் உரியதாக இருக்க வேண்டும். எல்லாருக்கும் உரியதாக இருக்க வேண்டும். நீதியரசர்களை நீங்கள் நினைத்தது போல் மாற்றவும், உங்களுக்கு ஏற்ற வகையில் நீதியரசர்களை நியமிப்பதும், அதனூடாக தீர்ப்புகளை வழங்குவதும் மிக மோசமானது. இதனைத்தான் அந்த குறிப்பிட்ட காலங்களில் தந்தை செல்வாவினுடைய மருமகனாக இருந்தவர், ஜே.ஆர். ஜெயவர்தனவோடு மிக நெருக்கமாக இருந்தவர் அவர் எழுதிய புத்தகத்திலே குறிப்பிட்டிருந்தார். ஜே.ஆர். ஜெயவர்தன ஒருமுறை சொன்னார்: "தீர்ப்புகளை நாங்கள் எங்களுக்கு ஏற்ற மாதிரி எழுதுவோம். நாங்கள் யாருடைய மண்டையை உடைக்க வேண்டும் அல்லது யாருக்கு என்ன தீர்ப்பு வழங்க வேண்டும் என்பதை ஒரு நீதிபதிகளுக்கு கார் வாங்கிக் கொடுப் பதன் மூலம் அல்லது வீடு வாங்கிக் கொடுப்பதன் மூலம் எங்களால் தீர்ப்பளிக்க முடியும்" என்று லலித் அத்துலத்முதலியும், ஜே.ஆர். ஜெயவர்தனவும் அந்த காலகட்டங்களில் 70களில் சொன்ன வரலாறுகளை நான் மீண்டும் பதிவிடுகிறேன்.

ஆகவே, ஏ.ஜே. வில்சன் எழுதிய "பிரேக் அப் ஆ.்.ப் ஸ்ரீலங்கா" (The Break-up of Sri Lanka) என்கிற புத்தகத்தை மீண்டும் ஒருமுறை படியுங்கள். அவர் மிகத் தெளிவாக, ஜே.ஆரோடு நெருக்கமாக இருந்த ஏ.ஜே. வில்சன் எழுதிய அந்த புத்தகத்தினுடைய ஒவ்வொரு வரிகளும் இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள தலைவர்கள் செய்த அநியாயங்களை சொல்லுகிறது.

அதனால்தான் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன், இந்த நாட்டினுடைய சங்கீத்சனை உடனே விடுதலை செய்ய உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். இந்த உயர்ந்த சபையின் ஊடாக அவரை பயங்கரவாத தடைச்சட்டத்தில் வைத்திருக்காதீர்கள் என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வெளிநாட்டவர்களை ஏமாற்றி பணம் பறித்த "கும்பல்" சுன்னாகத்தில் கைது!

புலம்பெயர் தேசத்தில் இருந்து வருபவர்களிடமும் ஏனையோரிடமும் இருந்து ஏமாற்றி பணம் மற்றும் நகைகளை பறித்த ஒரு கும்பலை சேர்ந்த மூவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த குழுவில் கணவன், மனைவி மற்றும் மச்சான் ஆகியோர் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், வெளிநாட்டில் இருந்து வருபவர்களை ஆசை வார்த்தை கூறி குறித்த பெண் ஒரு வீட்டுக்கு அழைத்து செல்வார். இதன்போது அவ் இடத்திற்கு வரும் கணவனும் அவரது மச்சானும் குறித்த இடத்திற்கு சென்று காணொளி பதிவு செய்து அவர்களை மிரட்டி பணம் மற்றும் நகை என்பவற்றை அபகரித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இதே பாணியில் ஒரு சம்பவம் இடம்பெற்ற நிலையில் அது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில் அந்த குழுவினரை சுன்னாகம் பொலிஸார் இன்றையதினம் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணுக்கு எதிராக ஏற்கனவே முறைப்பாடுகள் இருப்பதாகவும், அவர் போதைக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இழுவைமடி விவகாரத்தில் இரு நாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்குமாறு முதலமைச்சர் விஜயிடம் அகில இலங்கை மீனவர் கூட்டமைப்பு கோரிக்கை




"தற்போது தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய்யிடம் ஈழத்து மீனவர்களாகிய நாம் விசேட கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். அவர், எமது வாழ்வாதாரப் பிரச்சினைக்கான தீர்வை அவரிடம் கேட்பதற்கு எங்களுக்கு முழுமையான உரிமை இருக்கின்றது." - என்று அகில இலங்கை மீனவர் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என். வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் 11ம் திகதி வியாழன் அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் 15 ஆம் திகதி மீள ஆரம்பமாகும் இழுவைமடித் தொழில் இந்தியாவில் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க காலத்தினை முன்னிட்டு 60 நாள்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இழுவைமடி மீன்பிடித் தொழிலானது, எதிர்வரும் 15 ஆம் திகதி மீள ஆரம்பமாகவிருக்கின்றது. இந்தியாவில் இழுவைமடித் தடை நீங்குவது அந்த நாட்டு மீனவர்களுக்கு வசந்த காலமாக இருக்கலாம். ஆனால், அது எமக்குக் கடுமையான அழிவுக் காலமாகும்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினையானது ஏறத்தாழ 23 வருடங்களுக்கும் மேலாக நீடித்து வருகின்றது. எமது அரசிடமும் இந்தியத் தரப்பிடமும் பலமுறை கோரிக்கைகளை முன்வைத்தும், இழுவைமடித் தொழிலை முழுமையாக நிறுத்துவதற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் இரு நாட்டு அரசுகளும் எடுக்கவில்லை. இது தொடர்பில் பல பேச்சுகள் நடத்தப்பட்டு எட்டப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கும் இரு தரப்பும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முன்னர் இருந்த தமிழக முதலமைச்சர்களை விடவும், தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜய் எம் மீது அதிக கருணை கொண்டு எமது மீனவர் பிரச்சினையில் தலையிட்டு ஆக்கபூர்வமான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையிலான நேரடிப் பேச்சு ஒன்று இடம்பெற்று, இழுவைமடிப் படகுகளின் அத்துமீறல்கள் தொடர்பில் ஒரு இறுதியான இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அன்பான கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் இலங்கை அரசாங்கம் முனைப்பாகச் செயற்படவில்லை. நாடாளுமன்றத்தில் இழுவைமடித் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதிலும், அது நடைமுறையில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு உயர் நீதிமன்றத்தில் வழக்கடாடிய போது, அந்த வழக்கைச் சட்டமா அதிபர் திணைக்களமும் அரசியல்வாதிகளும் இணைந்து திட்டமிட்டுப் பலவீனப்படுத்தி விட்டார்கள்.

ஊர்காவற்றுறையில் உள்ள இழுவைமடிப் படகுகள், காரைநகரில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமில் தங்களைப் பதிவு செய்துவிட்டே தொழிலுக்குச் செல்கின்றார்கள். இழுவைமடிப் படகுகள் கடலில் மீன்பிடிப்பதற்குக் கடற்படையே அனுமதி வழங்குகின்றது.

கடந்த மே தினக் கூட்டத்திற்கு ஆட்களைத் திரட்டுவதற்காகக் கடற்றொழில் அமைச்சினுடைய அலுவலக அதிகாரிகள், இழுவைமடித் தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர். "உங்களுக்கான சட்டத்தை நீடித்து அதன் தன்மையைக் குறைப்பதற்கு முயற்சி செய்கின்றோம். எனவே எமது மே தினக் கூட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்" எனக் கோரியதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதன் மூலம் கடற்றொழில் அமைச்சரும் எமக்கு எதிராகவே செயற்படுகின்றார் என்பது புலனாகின்றது. இது எமக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.

இனியாவது எமது அரசு இந்த இழுவைமடிப் படகுகள் விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு, இலங்கை கடற்பரப்பில் இழுவைமடித் தொழிலை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். "வாரத்தில் குறைந்தது இரண்டு இழுவைமடிப் படகுகளையாவது கைது செய்யுங்கள்" என வலியுறுத்தி, அஞ்சல் அட்ந னநடைப் பிரசாரம் ஒன்றின் ஊடாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கவுள்ளோம்.

எமக்கு வெகுவிரைவில் முறையானதொரு தீர்வு கிடைக்காவிடின், முல்லைத்தீவிலிருந்து நெடுந்தீவு வரை ஒட்டுமொத்த மீனவர்களையும் ஒன்றிணைத்துக பாரிய கடல்வழிப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்." - என்றார்.




# வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து 37 வருடங்கள் நிறைவு: காணிகளை விடுவிக்கக் கோரி15 ஆம் திகதி பெரும் போராட்டம்

- ந.லோகதயாளன்

வலிகாமம் வடக்கு மக்கள் தமது சொந்தக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து 37 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையிலும், உயர் பாதுகாப்பு வலயங்களாக முடக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி, எதிர்வரும் திங்கட்கிழமை 15ம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் குறித்து மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவினர் ஊடகங்கள் மூலம் விசேட அறிவித்தலை விடுத்துள்ளனர்.

அந்த அறிவித்தலில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: "கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி எமது சொந்த ஊர்களில் இருந்து நாம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டோம். இதன்படி, கடந்த ஜூன் 5 ஆம் திகதியுடன் எமது இடப்பெயர்வு அலைக்கு 36 வருடங்கள் நிறைவடைந்து, தற்போது 37 ஆவது வருடத்தில் கால் பதிக்கின்றோம். நாட்டில் யுத்தம் நிறைவுற்று 17 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், எமக்கான பூரண மீள்குடியேற்ற உரிமை இன்னும் மறுக்கப்பட்டே வருகின்றது.

நாங்கள் குறிப்பாக ஜே/248, ஜே/255 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முழுமையாகவும், ஜே/251, ஜே/246 ஆகிய பிரிவுகள் பகுதியளவிலும் (மூன்றில் இரண்டு பங்கு) இதுவரை விடுவிக்கப்படாமல் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே வைக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாக, நாம் தொடர்ந்து அகதிகளாகவே வாழும் அவல நிலை நீடிக்கின்றது. எமது காணிகளை மீட்கப் பல போராட்டங்களையும், உயர் மட்டச் சந்திப்புக்களையும் நடத்திய போதிலும் எமக்கு இதுவரை எவ்விதப் பலனும் கிடைக்கவில்லை.

சொந்த நிலங்களை விடுவிக்கக் கோரி, கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி முதல் நாம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் அறவழியில் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக, எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலக முன்றலில் மாபெரும் அறவழிப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

பல தசாப்தங்களாகத் தாயகத்தில் அகதிகளாக வாழும் எமது மக்களின் நில உரிமையை வென்றெடுப்பதற்கான இந்தப் போராட்டத்துக்கு, சிவில் அமைப்புகள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் உங்களால் முடிந்த ஆதரவை வழங்கிப் பலம் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்." - என்றனர்.

# மாநகரசபையின் பொறுப்பில் "யாழ்ப்பாண கலாசார மையம்" கொண்டுவரப்பட வேண்டும் என சபையில் தீர்மானம் நிறைவேறியது!




யாழ்ப்பாணம் கலாசார மையித்தினை யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொறுப்பில் எடுக்கும் நடவடிக்கையினை விரைந்து செய்ய வேண்டும் என யாழ். மாநகர சபையில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.


யாழ் மாநகரசபையின் மாதாந்த அமர்வு 11ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் முதல்வர் திருமதி மதிவதனி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கலாசார மத்திய நிலையத்தின் பராமரிப்பு குறித்து விவாதிக்கப்பட்ட நிலையிலேயே இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தில், 2014 ஆண்டு ஜூன் மாதம் ஒன்பதாம் திகதி கைச்சாத்திடப் பட்ட இரு தரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட இந்த கட்டிடத்தை யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் விரைவாக கையளிக்க வேண்டும் எனவும், இதன் பொருட்டு எந்தவித நம்பிக்கை பொறுப்பு கட்டமைப்பு (TRUST) உருவாக்கப் படுவதற்கு இந்த சபை உடன்படவில்லை எனவும்,

இலங்கைக்கான மதிப்பார்ந்த இந்திய உயர் ஆணையர் அவர்களையும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் அவர்களையும் கோருவதென யாழ் மாநகரசபை தீர்மானித்துள்மை குறிப்பிடத்தக்கது.

# பாட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டமும்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தை மகிமைப்படுத்தும் பாடல்களைப் பாடியதற்காக சங்கீத்சன் கைது செய்யப்பட்டதாக போலீஸ் தரப்பு தெரிவிக்கின்றது. ஆனால் அவரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை முன்பைவிட அதிகமாகப் பிரபல்யப்படுத்தியிருக்கிறது. குறைந்தளவு பிரபல்யத்தோடு பாடி வந்த ஒரு பாடகரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை இலங்கை முழுவதும், அதற்கப்பாலும் பிரபல்யப்படுத்தியிருக்கிறது. இதை அதன் தர்க்கபூர்வ வார்த்தைகளில் சொன்னால், அவர் பாடிய அரசியலையும் கவனிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது; பேசுபொருள் ஆக்கியிருக்கிறது. அதன் தக்கபூர்வ விளைவாக மகிமைப்படுத்தியிருக்கிறது. எந்த அரசியலை மகிமைப்படுத்தியதற்காக அவர் கைது செய்யப்பட்டாரோ, அதே அரசியலை அவருடைய கைது பிரபல்யப்படுத்தியிருக்கிறது; கவனிப்புக்குரியதாக மாற்றியிருக்கிறது; மகிமைப்படுத்தியிருக்கிறது.**

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மகிமைப்படுத்தும் விதத்தில் ராப் பாடலைப் பாடியதற்காக கிளிநொச்சியில் வசிக்கும் பாடகர் சங்கீத்சன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரை அவர் விடுவிக்கப்படவில்லை. அவர் இதற்கு முன்னரும் இதுபோன்ற பாடல்களை உருவாக்கிப் பாடியிருக்கிறார். அண்மையில் வவுனியாவில் நடந்த வாகீசனின் இசை நிகழ்ச்சியில் சங்கீத்சன் பாடியிருக்கிறார். அவருடைய பாடல் தமக்குப் பிரச்சினையாக வரலாம் என்று கருதிய ஏற்பாட்டாளர்கள் அவரைப் பாட விடாமல் தடுத்திருக்கிறார்கள். மேலும், பரந்தனில் உள்ள அரச புலனாய்வுத் துறை சங்கீத்சனை ஏற்கனவே எச்சரித்திருக்கிறது. பின்னர் போலீஸ் கைது செய்திருக்கிறது.

ராப் பாடல் எனப்படுவதே எதிர்ப்பு வடிவந்தான். ராப் மரபு எனப்படுவது ஒடுக்கப்பட்டவர்களின் குரலைக்குரலற்றவர்களின் குரலைத்தடை செய்யப்பட்டவர்களுக்கான நீதியைப் பிரதிபலிப்பது.

தடை செய்யப்பட்ட ஓர் இயக்கத்தை மகிமைப்படுத்தும் பாடல்களைப் பாடியதற்காக சங்கீத்சன் கைது செய்யப்பட்டதாக போலீஸ் தரப்பு தெரிவிக்கின்றது. ஆனால் அவரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை முன்பைவிட அதிகமாகப் பிரபல்யப்படுத்தியிருக்கிறது. குறைந்தளவு பிரபல்யத்தோடு பாடி வந்த ஒரு பாடகரைக் கைது செய்ததன்மூலம் அரசாங்கம் அவரை இலங்கை முழுவதும், அதற்கப்பாலும் பிரபல்யப்படுத்தியிருக்கிறது. இதை அதன் தர்க்கபூர்வ வார்த்தைகளில் சொன்னால், அவர் பாடிய அரசியலையும் கவனிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது; பேசுபொருள் ஆக்கியிருக்கிறது. அதன் தக்கபூர்வ விளைவாக மகிமைப்படுத்தியிருக்கிறது. எந்த அரசியலை மகிமைப்படுத்தியதற்காக அவர் கைது செய்யப்பட்டாரோ, அதே அரசியலை அவருடைய கைது பிரபல்யப்படுத்தியிருக்கிறது; கவனிப்புக்குரியதாக மாற்றியிருக்கிறது; மகிமைப்படுத்தியிருக்கிறது.

அவர் கைது செய்யப்பட முன் அவருடைய பாடல்களைப் பகிர்ந்தவர்கள், அவரைக் கவனித்தவர்கள் ஒப்பீட்டளவில் குறைவு. தமிழ்ப் பகுதிகளிலேயே அவரைக் கவனித்தவர்கள் குறைவு. இப்பொழுது கைது செய்யப்பட்டதால் அவர் நன்கு தெரிய வந்துவிட்டார். எனவே அவரைக் கைது செய்ததன் மூலம் அரசாங்கம் அவரை அதிகம் கவனிப்புக்குரியவராக பிரபல்யப்படுத்தி விட்டது என்றுதான் கூற வேண்டும். அதாவது அரசாங்கம் எதைத் தடுக்க நினைத்ததோ, அது திமிறி கொண்டு மேலே வருகிறது. தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த கவிஞர் மு.பொன்னம்பலம் புங்குடுதீவைச் சேர்ந்தவர். அவர் எழுதிய ஒரு கவிதையின் தலைப்பு "அதிகாரம் புரியாத சமன்பாடு" என்பதாகும். "அடக்குமுறைதான் விடுதலையைப் பிரசவிக்கும் மருத்துவிச்சி" என்று மு.பொன்னம்பலம் கூறுகிறார். இது இந்தப் பாடகரின் விடயத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறதா?

அண்மை ஆண்டுகளாக ராப் பாடல்களைப் பாடுவோர் எண்ணிக்கை ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. கிழக்கிலும் வடக்கிலும் குறிப்பிடத்தக்க பாடகர்கள் தோன்றி விட்டார்கள். எனினும் இவர்கள் எல்லாருமே புகழடைந்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. கைது செய்யப்படும் வரையிலும் சங்கீத்சனும் அப்படித்தான். ஆனால் இப்பொழுது அவர் நன்கு தெரிய வந்துவிட்டார்.

அவரைக் கைது செய்ததன் பின்னணியில் வேறு உள்நோக்கங்கள் இருக்கலாம். அவர் கைது செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் கொழும்பில் இரண்டு செய்திகள் சிங்கள பௌத்த கடும்போக்காளர்களை அதிகம் கோபத்துக்கு உள்ளாக்கியிருந்தன. முதலாவது செய்தி, முன்னாள் படைப்புலனாய்வுப் பணிப்பாளர் சுரேஷ் சாலே சம்பந்தப்பட்ட செய்தி. ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் சுரேஷ் சாலே சிறைச்சாலையில் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவருக்கு ஒழுங்காக உணவு கொடுக்கப்படுவதில்லை என்றும், உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும், அதனால் அவர் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அவருடைய மகன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். அவருடைய மனைவியும் தன் கணவனின் உடல்நிலை, மனநிலை தொடர்பாக கவலை தெரிவித்திருந்தார். உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் சுரேஷ்




சாலேயை வைத்து இனவாதத்தை உருவேற்றத் தொடங்கி விட்டார்கள். இது முதலாவது செய்தி. இரண்டாவது செய்தி, கோட்டாபய ராஜபக்சவுக்கு நீதிமன்றம் பயணத்தடை விதித்திருப்பதாக வெளிவந்த ஒரு செய்தி. இந்த இரண்டு செய்திகளும் யுத்த வெற்றிவாதிகள் மத்தியில் அதிகம் கவனிப்பைப் பெற்றிருக்கின்றன. அரசாங்கத்துக்கு எதிராக சிங்கள பௌத்த உணர்வுகளைத் தூண்டுவதற்கு எதிர்க்கட்சிகள் இந்த இரண்டு செய்திகளையும் பயன்படுத்துகின்றன.

இப்படிப்பட்டதோர் அரசியல் சூழலில்தான் கிளிநொச்சியைச் சேர்ந்த ராப் பாடகரான சங்கீத்சன் கைது செய்யப்பட்டார். அதுவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அதுவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மகிமைப்படுத்தியதற்காகக் கைது செய்யப்பட்டார். எனவே சுரேஷ் சாலே, கோத்தபாய தொடர்பாக சிங்கள கடும்போக்காளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கொதிப்பான மனோநிலையைத் தணிக்கும் உள்நோக்கத்தோடு அரசாங்கம் கிளிநொச்சியில் சங்கீத்சனைக் கைது செய்திருக்கலாம்.

சங்கீத்சனைக் கைது செய்ததன் மூலம் அரசாங்கம், ஏனைய எல்லாப் பாடகர்களுக்கும் ஓர் எச்சரிக்கையை விடுத்திருக்கிறது. ஆயுதப் போராட்ட கால கட்டத்தில் தயாரிக்கப்பட்ட தாயகப் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்ற பாடல்களை இனிப் பாட முடியாது என்பதுதான் அந்த எச்சரிக்கை. கடந்த பல மாதங்களாக தாயகத்தில் நடக்கும் இசை நிகழ்வுகளில் குறிப்பாக ஆலய இசை நிகழ்வுகளில் தாயகப் பாடல்கள் பாடப்பட்ட வருகின்றன.

ஆலய நிகழ்வுகளில் மட்டுமல்ல, அரசியல் நிகழ்வுகளிலும் தாயகப் பாடல்கள் அண்மை மாதங்களாக பாடப்பட்டு வந்தன. குறிப்பாக தாயகப் பாடல்களை முன்பு பாடிய பாடகர்களில் ஒருவராகிய பார்வதிநாதசிவம் அண்மையில் சில மேடைகளில் தனது புகழ்பெற்ற பாடல்களைப் பாடினார். குறிப்பாக வீரசிங்க மண்டபத்தில் நடந்த ஒரு மகளிர் தின நிகழ்விலும் அதன்பின் யாழ்ப்பாணத்தில் டில்கோ ஹோட்டலில் நடந்த "போராளிகள் நலன்புரி அமைப்பின்" ஒன்று கூடலிலும் அவர் தனது பாடல்களைப் பாடினார். டில்கோவில் நடந்த அந்த நிகழ்வில் அவர் மட்டுமல்ல ஏற்கனவே தாயகப் பாடல்களைப் பாடிய வேறு சில பாடகர்களும் பாடினார்கள். சாந்தனின் மகனும் பாடினார். அந்த நிகழ்வில் இசையமைப்பாளர் கண்ணன், ரங்கன், பார்வதிநாதசிவம், சாந்தனின் மகன் உட்பட இசைஞர்களுக்கும் பாடகர்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது.

இவ்வாறாக கடந்த சில மாதங்களாக தாயகத்தில் தாயக எழுச்சி பாடல்களை மேடைகளில் பாடும் ஒரு போக்கு படிப்படியாக அதிகரித்து வந்தது. இந்தப் போக்கை இப்படியே விட்டால் ஒரு கட்டத்தில் தடை செய்யப்பட்ட எல்லாப் பாடல்களும் மேடைக்கு வந்துவிடும் என்று அரசாங்கம் உஷாரடைந்திருக்கலாம்.

மாவீரர் நாட்களின்போதும் திலீபனின் நினைவு நாட்களின்போதும் தடை செய்யப்பட்ட அமைப்பை நினைவுகூரும் விடயங்களைப் பயன்படுத்துவதற்குத் தடை உண்டு. அதற்குள் ஒருதொகுதி பாடல்களும் அடங்கும். ஆனால் அண்மைக் காலங்களில் வாகீசனைப் போன்றவர்கள் மறைமுகமாக இறந்த காலமொன்றைப் போற்றும்மகிமைப்படுத்தும் ராப் பாடல்களின் மூலம் பிரபல்யமானார்கள். ஆலய நிகழ்வுகளிலும் அரசியல் நிகழ்வுகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட தாயகப் பாடல்களைக் கேட்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் தமக்கு ஆபத்துக் குறைவு என்று ஒருதொகுதி பாடகர்கள் கருதியிருக்கலாம்.

அவ்வாறு கருத்தியதற்கு அரசாங்கமும் பொறுப்பு. எப்படியென்றால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது என்பிபியின் தமிழ் வேட்பாளர்களில் சிலர் மறைமுகமாக விடுதலைப்புலிகள் அமைப்பைப் போற்றும் பாடல்களைத்தயாரித்ததாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதை மனோகணேசன் அண்மையில் சமூக ஊடக வலைத்தளங்களில் குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களில் சிலர் அவ்வாறான பாடல்களை பிரச்சாரக் கவர்சிக்காகப் பயன்படுத்தலாம் என்றால் அந்த வகைப் பாடல்களை தாமும் ஏன் பாடக்கூடாது என்று பாடகர்கள் யோசித்திருக்கலாம். அதனாலும் அண்மைக் காலங்களில் கோவில் நிகழ்வுகளிலும் ஏனைய மேடைகளிலும் தாயகப் பாடல்களைக் கேட்கக்கூடியதாக இருந்தது. இதனால் அரசாங்கம் உஷாரடைந்து விட்டது.

இதன் விளைவாக புலனாய்வுத் துறை சங்கீத்சனை எச்சரித்திருக்கிறது. அதன்பின் அண்மையில் உரும்பிராயில் ஓர் ஆலய நிகழ்வில், மேடையில், தாயகப் பாடல் இசைக்கப்படுக்கையில் போலீஸ் அதைத் தடுத்து நிறுத்தியது. அந்தப் பாடலைப் பாடியவர் சாந்தனின் மகனாகும். அவ்வாறு தடுக்கப்பட்ட சில வாரங்களின் பின் சங்கீத்சன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

எனவே சங்கீத்சனைக் கைது செய்தமை என்பது திடீரென்று நடக்கவில்லை. அதற்கு ஒரு தொடர்ச்சி உண்டு.விடுதலைப் புலிகளை நினைவுபடுத்தும் பாடல்களைப் பகிரங்கமாகப் பாட அனுமதித்தால் அது அந்த இயக்கத்தை மீளுருவாக்குவதில் முடியலாம் என்று போலீஸ் தரப்பு கூறுகிறது. ஆனால் கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது அரசாங்கத்தின் வேட்பாளர்களாகப் போட்டியிட்ட தமிழர்கள் உருவாக்கிய பாடல்களில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை மகிமைப்படுத்தும் வரிகள் காணப்பட்டன.


தேசிய மக்கள் சக்தி மட்டுமல்ல, மைத்திரியின் கட்சியும் அதைச் செய்தது. அது நடந்தது கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு முதல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில். அதில் யாழ்ப்பாணத்தில் அதிகளவு வாக்குகளைப் பெற்ற அங்கஜன் தனது தேர்தல் பிரச்சார தேவைகளுக்காக தாயகப் பாடல்கள் சிலவற்றை தெரிந்து எடுத்துப் பயன்படுத்தியது அவதானிக்கப்பட்டது. குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் வாக்காளர்களைக் கவர்வதற்கு அவர் அந்தப் பாடல்களைப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

(தொடர்ச்சி ___ பக்கம்)

# இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களுக்கு வீர வணக்கத்துடன் ஆழ்ந்த இரங்கல்

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் அழியாத தடம் பதித்த மகத்தான படைப்பாளி, இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்கள் அன்று 10.06.2026 ன்றுகாலமானார் என்ற செய்தி பேரதிர்ச்சியையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பாரதிராஜா அவர்கள் ஒரு திரைப்பட இயக்குநர் மட்டுமல்லர். அவர் தமிழர் பண்பாடு, தமிழ் மண், தமிழ் கிராமிய வாழ்வியல் மற்றும் தமிழின உணர்வுகளைத் திரையுலகின் மையத்திற்கு கொண்டு வந்த உன்னதமான கலைஞர். தமிழ்த் திரைத்துறை பிறமொழி ஆதிக்கத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், தமிழ் மண்ணின் மண்வாசனையையும், கிராமிய மக்களின் வாழ்க்கை முறையையும், தமிழர் உணர்வுகளையும் திரைப்படங்களில் பிரதிபலித்து புதிய பாதையை உருவாக்கிய புரட்சியாளர்.




“என் இனிய தமிழ் மக்களே” என்று அன்போடும் உரிமையோடும் அவர் மக்களை அழைத்த விதம், அவரது தமிழ்ப்பற்றையும் மக்கள்மீதான பாசத்தையும் வெளிப்படுத்தியது. தமிழர் வாழ்வியலை மையமாகக் கொண்டு உருவாக்கிய அவரது திரைப்படங்கள் வெறும் கலைப் படைப்புகள் அல்ல; அவை தமிழர் சமூகத்தின் வரலாறு, பண்பாடு மற்றும் அடையாளத்தைப் பதிவு செய்த ஆவணங்களாகவும் விளங்குகின்றன.

திரையுலகில் அவர் செய்த பங்களிப்பிற்காக இந்திய அரசின் உயரிய விருதுகள் உட்பட பல தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரங்களைப் பெற்றிருந்தாலும், அவர் தனது வாழ்க்கையை வெறும் கலை உலகிற்குள் மட்டுமே வரையறுத்துக் கொள்ளவில்லை. தமிழர் உரிமைகள் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் தனது குரலை உயர்த்திய சமூகப் போராளியாகவும் திகழ்ந்தார்.

தமிழீழத் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலைகளை எதிர்த்து அவர் வெளிப்படையாகக் குரல் கொடுத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், ஈழத் தமிழர்களின் மனித உரிமை பாதுகாப்பிற்கும் தொடர்ந்து ஆதரவு தெரிவித்தார். தமிழீழ இனப்படுகொலையைக் கண்டித்து இராமேசுவரத்தில் அவர் தலைமையில் நடைபெற்ற திரைப்படத் துறையினரின் போராட்டம் உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்த முக்கிய நிகழ்வாகும்.

அதேபோல் காவிரி நீர் உரிமை, ஏழு தமிழர் விடுதலை, மொழி உரிமை, மாநில உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு தமிழர் நலப் போராட்டங்களிலும் அவர் பங்கேற்று தனது பங்களிப்பை வழங்கினார். திரையுலகில் மட்டுமல்லாமல் தமிழர் அரசியல், சமூக மற்றும் தேசிய உரிமைப் போராட்ட வரலாற்றிலும் அவர் ஒரு முன்னோடி ஆளுமையாக நினைவுகூரப்படுவார்.

ஈழத் தமிழர்களை நேசித்தார். அவர்களுக்காக தொடர்ந்து குரல் கொடுத்தார். துன்பத்தில் இருந்த தமிழர் இனத்திற்காக தனது புகழையும் செல்வாக்கையும் பயன்படுத்திய நேர்மையான தமிழ் உணர்வாளராக வாழ்ந்தார்.

இன்று அவர் உடலால் எம்மிடையே இல்லாவிட்டாலும், அவரது படைப்புகள், அவரது குரல், அவரது தமிழ்ப்பற்று மற்றும் தமிழர் மீதான அன்பு என்றும் நிலைத்திருக்கும்.

தமிழ்த் திரையுலகம் ஒரு மகத்தான கலைஞரை இழந்துள்ளது. தமிழினம் ஒரு உறுதியான குரலை இழந்துள்ளது. உலகத் தமிழர்கள் தங்களின் உண்மையான நண்பரையும் ஆதரவாளரையும் இழந்துள்ளனர்.

இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

சென்று வாருங்கள் இயக்குநர் இமயமே!

உங்களை வழியனுப்பி வைக்கிறோம் ஆனால் உங்கள் நினைவுகளையும், உங்கள் கலைச் சாதனைகளையும், தமிழர் உரிமைக்காக நீங்கள் எழுப்பிய குரலையும் என்றும் மறக்கமாட்டோம்.

வீர வணக்கம்! ஆழ்ந்த இரங்கல்கள்!

ஜாம்பவான்கள் ஒருபோதும் முழுமையாக இறப்பதில்லை அவர்கள் தங்களால் ஊக்கமளிக்கப்பட்ட மக்கள் மூலமாகவும், தாங்கள் முன்னெடுத்த கொள்கைகள் மூலமாகவும் என்றென்றும் வாழ்கிறார்கள்.

**எழுதியவர் - ஈழத்து நிலவன்**
**தமிழ்த் தேசிய வரலாற்றாசிரியர் - 10/06/2026**

*(8 பக்கத் தொடர்ச்சி)*

---

## *பாட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டமும்*

---

*அதாவது தென்னிலங்கை மையக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் தமது தேர்தல் தேவைகளுக்காக, வாக்குகளைத் திரட்டும் பிரச்சார உத்தியாக ஆயுதப் போராட காலப் பாடல்களைப் பயன்படுத்துகின்றார்கள். அல்லது ஆயுதப் போராட்டத்தை மறைமுகமாகப் போற்றும் பாடல்களைத் தயாரிக்கின்றார்கள். அதைப் போன்ற பாடல்களை ஆலய இசை நிகழ்ச்சிகளில் பாடும்போது, இப்பொழுது அதைத் தடுக்கிறார்கள் சங்கீத்சனைக் கைது செய்தார்கள்.*

*அதாவது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அதை பயன்படுத்தலாம் என்று தென்னிலங்கை மையக் கட்சிகள் நம்புகின்றன. இதில் உள்ள கொடுமை என்னவென்றால், சிங்கள பௌத்த கட்சிகள் மட்டுமல்ல, சில தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளும்கூட ஆயுதப் போராட்ட நினைவுகளைத் தமது தேர்தல் வெற்றிகளுக்காகத்தான் பயன்படுத்துகிறார்கள் என்பது கடந்த 17 ஆண்டுகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எந்த அரசியலை வைத்து வாக்குகளைத் திரட்டுகிறார்களோ, அந்த அரசியலுக்கு அவர்கள் உண்மையாகவும் விசுவாசமாகவும் இல்லை என்பதைத்தான் கடந்த 17 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன. தமிழ்த் தேசியவாத அரசியலைப் பேசும் அரசியல் வாதிகளில் சிலரே அவ்வாறு ஆயுதப் போராட்டத்தின் நினைவுகளை தேர்தல் தேவைகளுக்காகத் துப்பிரயோகம் செய்யலாம் என்றால், அந்த உதாரணத்தை சிங்கள பௌத்த கட்சிகளும் பின்பற்றும். அதுதான் கடந்த 17 ஆண்டுகளிலும் நடந்தது.கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியும் அதைத்தான் செய்தது.*

*இவ்வாறு தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகள் சிலராலும், தென்னிலநகைக் கட்சிகளாலும் அந்தப்பாடல்கள் தேர்தல் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகையில் அது ஒரு விவகாரமாக சட்டப்பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் அதையே கோவ-ில் மேடைகளில் பாடும்போதும் சமூக ஊடக வலைத்தளங்களில் பகிரும்போதும் அது ஒரு சட்டப்பிரச்சினையாக மாறுகிறது.பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்படுகிறது.*

*தேசிய மக்கள் சக்தியின் அடித்தளமாகக் காணப்படும் ஜேவிபி பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்ற வேண்டும் என்று கேட்டுத் தமிழ்க் கட்சிகளோடு இணைந்து போராடியிருக்கிறது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்கப்போவதாக வாக்குறுதியளித்திருக்கிறது. ஆனால் ஆட்சிக்கு வந்ததும் அந்த வாக்குறுதிகளையெல்லாம் அவர்கள் மறந்து விட்டார்கள். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை, பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றன அகற்றப்படும் அறிகுறிகள் தெரியவில்லை. மட்டுமல்ல, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது நடவடிக்கைகளும் தொடர்கின்றன. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து 21 மாதங்களாகி விட்டன.தமிழ் மக்களுக்கு அவர்கள் காட்டும் மாற்றம் இதுதானா?*

## *இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழ் ஹிப் ஹாப் பாடகர் சங்கீத்சனை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஒன்றாரியோ அமைச்சர் விஜய் தணி–காசலம் வலியுறுத்தல்*

---





*ஒன்ராறியோவின் சுகாதார இணை அமைச்சரும், ஸ்காபரோ “ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினருமான அமைச்சர் விஜய் தணிகாசலம், இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 24 வயதான தமிழ் ஹிப் ஹாப் கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமார், அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.*

*சங்கீத்சனின் கைது நடவடிக்கை கலைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் தமிழ் அடையாளத்தின் மீ-தான நேரடி தாக்குதலாகும் என அமைச்சர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*“ஒரு இளம் கலைஞரை அவரது இசைக்கும் தமிழ் அடையாளத்திற்கும் சிறையில் அடைப்பது, கருத்துச் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்தின் அடித்தளத்திற்கும் எதிரான செயல்,” என அமைச்சர் விஜய் தெரிவித்தார். “பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தமிழ் சமூகத்தின் மீது தணிக்கை மற்றும் அச்சுறுத்தல் கருவியாக தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது. அது ரத்து செய்யப்பட வேண்டும்.”*

*சங்கீத்சனின் கைது, உலகம் முழுவதும் உள்ள தமிழ் சமூகங்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் கலைஞர்கள் மத்தியில் தீவிர கவலையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தமிழ் மக்கள் இன்னும் கண்காணிப்பு, இராணுவமயமாக்கல் மற்றும் அரச அனுசரணையிலான அடக்குமுறைகளை எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்தச் சம்பவம் மீண்டும் நினைவூட்டுகிறது என அமைச்சர் விஜய் குறிப்பிட்டார்.*

*“இதனால்தான் உலகளாவிய விழிப்புணர்வு, கல்வி மற்றும் நினைவேந்தல் மிகவும் அவசியமானவை,” என அமைச்சர் விஜய் கூறினார். “ஒன்ராறியோவில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் 104, தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைச் சட்டம், தமிழ் குரல்கள், வரலாறு மற்றும் உண்மை ஒருபோதும் அழிக்கப்படக்கூடாது என்பதற்காகவே கொண்டு வரப்பட்டது.”*

*“கலைஞர்களும் அரச தலைவர்களும் குரலற்றவர்களுக்காக ஒன்றிணைந்து நிற்கும்போது, அது வலுவான செய்தியை உலகிற்கு தெரிவிக்கிறது,” என அமைச்சர் விஜய் கூறினார். “சங்கீத்சனின் கைது, இலங்கை அரசால் தமிழ் குரல்கள் இன்னும் மௌனப்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் விடுதலையாகும் வரை நாம் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.”*

*சங்கீத்சனின் கைது தொடர்பாக அதிகரித்து வரும் சர்வதேச கவனம், கருத்துச் சுதந்திரத்தை பாதுகாக்கவும், தமிழ் குரல்களை காக்கவும், தமிழ் சமூகத்திற்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதை முடிவுக்கு கொண்டு வரவும் உள்ள அவசரத் தேவையை வலியுறுத்துகிறது.*

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட வைத்திய நிபுணர் கலாநிதி ஜெயக்குமாரன்!

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது வைத்திய நிபுணர் கலாநிதி ஜெயக்குமாரன் தெரிவித்துள்ள தகவல் அதிர்ச்சியை தந்துள்ளது என பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்!

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற நிலையில் அவர்களுக்கான சிகிச்சை வளங்களில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என புற்றுநோய் வைத்திய நிபுணரும் தேசிய புற்றுநோய்யல் நிறுவன ஆலோசகரமான வைத்திய கலாநிதி நடராஜா ஜெயக்குமாரன் தெரிவித்தார்.

10ம் திகதி அன்று புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் விடம்பட்ட மறைந்த பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த நிகழ்வில் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், புற்றுநோய் இலங்கையில் மட்டுமல்ல உலகத்தில் உள்ள பல நாடுகளில் தாக்கம் அதிகரித்துள்ள தன்மையை கொண்டுள்ளது.

இந்தப் புற்றுநோய் உருவாவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற நிலையில் பொதுவாக உணவுப் பழக்கங்கள் இந்த நோய்க்கு ஆரம்ப கர்த்தாவாக அமைகிறது.



உலகமயமாக்கலின் விளைவாக இரசாயன உரங்கள் கிருமி நாசினிகள் உணவு பொருட்களுக்கு அதிகம் பயன்படுத்தப் படுகின்றமையால் புற்று நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது.

உடற்பயிற்சி மற்றும் பாதுகாப்பான உணவு பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இலங்கையை பொறுத்தவரையில் புற்றுநோய்க்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் சுகாதார அமைச்சு நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதற்கான ஏற்பாடுகளையும் வழங்கியிருக்கிறது.

இலங்கையில் புற்றுநோயாளர் ஒருவர் தனது சிகிச்சையை விரும்பிய இடத்தில் பெறுவதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் விரும்பிய இடங்களில் சிகிச்சைகளை பெற முடியும்.

ஆகவே புற்று நோயையை வராமல் தடுப்பதற்கு சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களை கொண்டு வந்தால் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# "ஆளுநரின் அரசியல் தலையீட்டால் சுயாதீனத்தை இழந்து முறைகேடுகளை செய்யும் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும்."




## யாழ்ப்பாணத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் சுவரொட்டி



"வடக்கு மாகாண ஆளுநரின் அரசியல் தலையீட்டால் சுயாதீனத்தை இழந்து முறைகேடுகளை செய்யும் வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும்" என குறிப்பிடப்பட்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் யாழ் நகரின் மையப் பகுதிகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சேவையின் தேவை என ஒவ்வொரு கட்டங்களிலும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களாக 3 கட்டங்கள் இடமாற்றம் இடம்பெற்றதை தொடர்ந்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# கனடாவில் படிமுறைத்தமிழ் விழாவில் வீரகேசரி முன்னாள் பொறுப்பாசிரியர் வடிவேல் தேவராஜ் அவர்களுக்கு "ஊடகப்பேரொளி" பட்டம் வழங்கப்பெற்றது

கனடிய செய்திகள்
Canadian News



கனடா படிமுறைத்தமிழ் பெருவிழா கடந்த மே 31 ஆம் திகதி ஸ்காபுறோ நகரிஇல் நடைபெற்றது. இவ் விழாவில் சில துறைகளில் சேவையாற்றிவரும் அன்பர்கள் சிலர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்கள். அவர்களில் ஒருவராக வீரகேசரி முன்னாள் பிரதம பொறுப்பாசிரியரும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருபவருமான வடிவேல் தேவராஜ் அவர்கள் ஊடகத்துறை மற்றும் ஆய்வு ஆகிய துறைசார்ந்த அவரது பங்களிப்புக்கென "ஊடகப்பேரொளி" என பட்டம் வழங்கி கௌரவிக்கப்பெற்றார்.

மேற்படி கௌரவத்தைஅவருக்கு வழங்கிய எழுத்தாளரும் கவிஞருமான கே.என். நவரட்னம் (க. நவம்) மற்றும் படிமுறைத்தமிழ் கல்வித்திட்டத்தின் நிறுவுனர் சித்தம் அழகியான் இராசரத்தினம் ஆகியோர் இங்கு காணப்படுகின்றார்கள்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை தனது அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி!



கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் முக்கிய அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பட்டதாரியுமான லோகன் கணபதி அவர்கள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட படம் இங்கு காணப்பெறுகின்றது.

தற்போது கனடாவிற்கு வருகை தந்துள்ள இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு - கிழக்கு - மலையகம் என அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் மற்றும் அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக தொடர்ச்சியாக குரல் எழுப்பி வரும் மனோ கணேசன் அவர்களை தனது உத்தியோகபூர்வமான அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த லோகன் கணபதி எம்பிபிஅவர்கள் மனோ கணேசன் அவர்களுக்கு ஒன்றாரியோ மாகாண முதல்வரின் வாழ்த்து மடலை வாசித்து வழங்குவதை இங்கு காணலாம். படத்தில் "கனடா உதயன்" லோகேந்திரலிங்கமும் காணப்படுகின்றனர்.

*- Uthayan LJI Journalist Arjune -*


# அமெரிக்கா வாழ் ஈழத்து எழுத்தாளர் விக்டர் ராஜலிங்கம் எழுதிய "உலகின் மூத்தமொழி தமிழ்" என்னும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஸ்காபுறோவில் வெளியிடப்பெறுகின்றது!




அமெரிக்கா வாழ் ஈழத்து எழுத்தாளர் விக்டர் ராஜலிங்கம் எழுதிய "உலகின் மூத்தமொழி தமிழ்" என்னும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஸ்காபுறோவில் எதிர்வரும் 28-06-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு 1173 பிரிம்லி வீதி ஸ்காபுறோ என்னும் விலாசத்தில் அமைந்துள்ள QUEEN PALACE BANQUET HALL மண்டபத்தில் வெளியிடப்பெறுகின்றது.

பல விமர்சகர்கள் மற்றும் பேச்சாளர்கள் கலந்து கொள்ளவுள்ள இந்த நூல்வெளியீட்டு விழாவில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இராப்போசன விருந்து ஆகியன அமையவுள்ளன.

நூல்வெளியீட்டு விழா தொடர்பான விபரங்களுக்கு (416) 732-9046 அல்லது (647) 285-7570 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.




SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
MULTICULTURAL
CANADA DAY
FREE DOSA FEAST!
FOR CANADIAN SENIORS
HAPPY CANADA DAY
CELEBRATING CANADA. TOGETHER.
WEDNESDAY, JULY 01, 2026
REGISTRATION STARTS 2:00 PM
SERVICE 2:00 PM TO 5:00 PM
VENUE:
WOODSIDE SQUARE MALL
PARKING LOT - IN FRONT OF
SARAVANAA BHAVAN
1571 SANDHURST CIRCLE
SCARBOROUGH
PACKED DOSA MEALS
FREE COFFEE & TEA
SPECIAL COMMUNITY PRESENTATION
$500,000
CHEQUE PRESENTATION TO
Scarborough Health Network Foundation
IN SUPPORT OF OUR COMMUNITY, BUILDING A HEALTHIER TOMORROW.
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
DATE 2026
PAY TO THE ORDER OF
Scarborough and Rouge Hospital
Five Hundred Thousand Only
$500,000
Authorized Signature
Proudly supporting our community healthcare
FOR CANADIAN SENIORS ONLY
PROOF OF CANADIAN CITIZENSHIP REQUIRED
NO RESERVATIONS
FIRST COME, FIRST SERVED
WHILE QUANTITIES LAST
FOR FURTHER DETAILS CONTACT info@sugshe.com




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிங்கள — பௌத்த ஒற்றையாட்சி அரசில் தமிழ் மக்களுக்கு "நீதி இல்லை"

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் உப தலைவர் அமரர் நடேசனின் நினைவேந்தல் நிகழ்வில் எடுத்துரைக்கப்பெற்றது



பௌத்த ஆதிக்கத்தைக் கொண்ட ஒற்றையாட்சி அரசிற்குள் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காமையே, தனிநாடு கோருவதற்கு காரணமாக அமைந்தது என, 22 வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் நினைவேந்தலில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

"எங்களுடைய ஊடகவியலாளர்கள், நான் நினைக்கிறேன் 43-ற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதிலும் 27-ற்கும் மேற்பட்டவர்கள் என நினைக்கின்றேன். ராஜபக்ச ஆட்சிக் காலத்தின் போதுதான் அதிகளவான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். எங்களுக்கு, கடத்தப்பட்டவர்களும் இல்லை, காணாமல் ஆக்கப்பட்டவர்களும் இல்லை, கொல்லப்பட்டவர்களுக்குரிய நீதியும் இல்லாத நிலையில், நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இது தான் எமது நாட்டு மக்கள் (தமிழர் தாயக மக்கள்), இந்த அரசாங்கத்தில் மத்திய அரசின் ஒற்றையாட்சி, பௌத்த மேலாதிக்கப் பொறிமுறையிலிருந்து வாழ முடியாது, எங்களுக்குச் சமநீதி கிடைக்க முடியாது என்ற காரணத்திற்காகத்தான், அவர்கள், "எங்களைத் தனியாக விட்டு விடுங்கள்" என சிந்திக்கக்கூடிய ஒரு நிலைமை வந்தது என்னவென்றால், அந்தக்காலத்தில் அவர்கள் சமநீதி, சமத்துவமான ஒரு உரிமையை வழங்க முடியாது இருந்த விடயத்தைச் செய்தார்கள்." சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சி காலத்தில், அரசாங்க இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 22-வது நினைவேந்தல் மட்டக்களப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் இதனைத் தெரிவித்தார். 2004 மே 31 ஆம் திகதி காலை மட்டக்களப்பில் உள்ள தனது அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருந்த போது, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில், பின்நாட்களில் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சராக பதவி வகித்த விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான கருணா தரப்பினர் மீதே, சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான மனித உரிமைகள் கண்காணிப்பகம் (HRW), குற்றம் சாட்டியிருந்தது.

கொழும்பிலிருந்து வெளியாகும் வீரகேசரி பத்திரிகையின் எழுத்தாளரும், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (TMA) முன்னாள் உப தலைவருமான நடேசனின் நினைவேந்தலை தெற்கில் நடத்துவதற்கு, தெற்கைச் சேர்ந்த எந்தவொரு ஊடக அமைப்போ அல்லது நிறுவனமோ இம்முறையும் நடவடிக்கை எடுத்ததாக அறியக் கிடைக்கவில்லை.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவுகூருவதற்காக மட்டக்களப்பு காந்தி பூங்காவிற்கு முன்னால் நிறுவப் பட்டுள்ள நினைவுத் தூபிக்கு முன், ஐயாத்துரை நடேசனின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, சுடரேற்றி அவருக்கு அஞ்சலி செலுத்திய மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக மையம் மற்றும் கிழக்கு மாகாண செய்தியாளர் சங்கம் ஆகியன, தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சிலருடன் இணைந்து மே 31ஆம் திகதி முன்னெடுத்த போராட்டத்தின் போது, இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் நீதி கோரப்பட்டிருந்தது.

இதேவேளை, மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஐயாத்துரை நாடேசனை நினைவுகூறும் நிகழ்வு ஒன்றை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ்ப்பாண அலுவலகத்தில் நடத்தியிருந்தது. "நெல்லை நடேசன்" எனப் பிரபலமாக அறியப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன், 2004 ஆண்டு மே 31ஆம் திகதி காலை மட்டக்களப்பில் உள்ள தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உப தலைவர் நடேசனின் படுகொலையைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல தமிழ் ஊடகவியலாளர்கள் தமது உயிர் பாதுகாப்புக் கருதி பிரதேசத்தை விட்டு வெளியேற அல்லது வெளிநாடுகளுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

படுகொலை செய்யப்படும் போது ஐம்பது வயதுடைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஐயாத்துரை நடேசன், வீரகேசரி பத்திரிகை, ஐடீஊ தமிழ் உட்பட கனடாவின் சில ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகவியலாளராக பணியாற்றினார்.

மட்டக்களப்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் கொலை வழக்கை மீண்டும் ஆரம்பிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டக்களப்பு ஊடக மையம் மற்றும் கிழக்கு மாகாண செய்தியாளர் சங்கம் ஆகியன கடந்த கால அரசாங்கங்களுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும், இன்று வரையில் அது தொடர்பில் சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்ததாக அறியக் கிடைக்கவில்லை.

கனடிய செய்திகள் Canadian News

# இவ்வருட கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் 6 உயரிய விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள்!






கடந்த 06-06-2026 அன்று சனிக்கிழமை கனடா ஸ்காபுறுறோ நகரில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இவ்வருட கனடா "உதயன் சர்வதேச விருது விழா"வில் 6 உயரிய விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள் பல பிரமுகர் நின்றிருந்த மேடையில் தங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். மண்டபம் நிறைந்த விழாவாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபைகளின் உறுப்பினர்கள் என பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இலஙகையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பயனுள்ள உரையொன்றையும் ஆற்றினார்.

விழாவிற்கு முனைவர் வாசுகி நகுலராஜா தலைமை தாங்கினார். சிறப்புரையை அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் ஆற்றினார். அன்றைய தினம் கனடா ஸ்காபுறோ நகரில் அமையப்போகின்ற "தமிழர் சமூக மையம்" நிதி சேகரிப்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றி எதிர்பார்க்கப்பெற்ற தொகையைத் தாண்டி நிதி சேகரிப்பு திட்டத்தை வெற்றிகரமாக நகர்த்திச் சென்று கொண்டிருக்கும் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் அவரது அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் பாராட்டி கனடிய பாராளுமன்றம் மற்றும் ஒன்றாரியோ

















மாகாண அமைச்சு ஆகியவற்றின் சார்பில் வழங்கப்பெற்ற சான்றிதழைகளை சாந்தா பஞ்சலிங்கத்திடம் அரச பிரதிநிதிகள் கையளித்தார்கள்.







கனடா உதயன் பிரதம ஆசிரியரும் உதயன் சர்வதேச விருது விழாவின் நிறுவனருமான லோகன் லோகேந்திரலிங்கத்தின் சேவையைப் பாராட்டியும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோர் அரசு சார்ந்த சார்ந்த சான்றிதழ்களை வழங்கினார்கள். இவ்வருட கனடா "உதயன் சர்வதேச விருது விழா"வில் 6 உயரிய விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள் அறுவரும் பல துறை சார்ந்த பிரமுகர் நின்றிருந்த மேடையில் தங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

அவரிகளில் கனடாவை வாழ்விடமாகக் கொண்டவர்களான கலாநிதி சாம்ப. சோமஸ்கந்த குருஜீ அவர்களுக்கு "கலை இலக்கிய மேன்மை விருது - 2026 - ஒன்றாரியோ" விருதும், மொன்றியா நகரில் வாழும் சங்கீத ஆசிரியை செல்வமலர் மதுரநாயகம் அவர்களுக்கு கலை இலக்கிய மேன்மை விருது - 2026 - கியுபெக்" விருதும், மிசிசாகா நகரில் வாழும் வர்த்தகப் பிரமுகர் கனேந்திரன் செல்வராஜா அவர்களுக்கு "வர்த்தக தொழிலதிபர் முன்னோடி விருது - 2026 - ஒன்றாரியோ" விருதும், "உதயன் இளையோர் அடையாள விருது - ஒன்றாரியோ" விருது செல்வி அபிரா ஜெயக்குமார் அவர்களுக்கும். கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் கனடா - வன்னிச் சங்கம் அமைப்பிற்கு இவ்வருடத்திற்குரிய "தலைமைத்துவ விருது - ஒன்றாரியோ" விருதும் இங்கிலாந்து வாழ் எழுத்தாளரும் கணக்காளருமான "வவுனியூர் உதயனன்" அவர்களுக்கு "கலை இலக்கிய மேன்மை விருது - 2026 - ஐரோப்பா" விருதும் வழங்கப்பெற்றன.

மேற்படி விருது விழாவை சிறப்பாகவும் நேர்த்தியாகவும் நடத்த ஆதரவு வழங்கிய வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் நிறுவனங்களுக்கும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பெற்றன.

*- Uthayan LJI Journalist Arjune -*

# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2026



## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள்
பொற்பூண் டைங்கள் நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள். பொங்கிய
ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

Email: bramptonbhuvaneshwari@gmail.com

www.Bhuvaneshwariamman.ca

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிராம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஷ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா அருள்மிகு புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம், மஞ்சம், சப்பரம், தேர், தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 7 ஆம் நாள் 21.06.2026, ஞாயிற்றுக்கிழமை, ஸப்தமி திதியும், பூரம் நட்சத்திரமும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள் த்வஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெறவுள்ளது அதனைத் தொடர்ந்து மஹோற்சவம் ஆரம்பமாகி 15 நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெற அம்மன் திருவருள் கூடியுள்ளது. பக்தர்கள் தொண்டர்கள் உற்சவ உபயதாரர்கள் அனைவரும் தினமும் காலை மாலை இருவேளையும் ஆலயத்திற்கு ஆசாரசீலர்களாக வந்து கண் கண்ட தெய்வமாய் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகையை தரிசித்து இஷ்டசித்திகளையும் சகல செல்வங்களும் நீண்ட ஆயுளும் பெற்று பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

20-06-2026 சனிக்கிழமை காலை: தேவதா அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, கணபதிஹோம்
மாலை: வாஸ்துசாந்தி, பிரவேச பலி, ம்ருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், யாகசாலை நிர்மாணம்

21-06-2026 ஞாயிறு
காலை 9:30-11:00
கொடியேற்றம்

26-06-2026 வெள்ளி
இரவு 8:30 மணிக்கு
மஞ்சம்

03-07-2026 வெள்ளி
இரவு 8:30 மணிக்கு
சப்பரம்

04-07-2026 சனி
காலை 11:30 மணிக்கு
தேர்த்திருவிழா

05-07-2026 ஞாயிறு
காலை 11:30 மணிக்கு
தீர்த்ததிருவிழா

05-07-2026 ஞாயிறு
இரவு 7:00 மணிக்கு
கொடியிறக்கம்

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்

### காலை திருவிழா
காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நபன கும்ப பூஜை, மூலவர் அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை, கொடிஸ்தம்பபூஜை, யாகபூஜை
மதியம் 11.30 மணி வசந்தம்டப பூஜை, யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்.

### மாலை திருவிழா
5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை, ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.

**சர்வபோதகம்:**
சிவகாம ரத்னா சிவஸ்ரீ வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
**கொடியேற்றக் குருக்கள்:**
சிவஸ்ரீ. வாமதேவ தே.கௌரிசங்கர சிவாச்சாரியார்.
**மஹோற்சவ குருமார்கள்:**
சிவஸ்ரீ பரணி விஷ்ணு வர்த்த குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு: தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம், அங்கபிரதகஷணம், காவடி, கற்பூர சட்டி, எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

**தேவஸ்தான மங்கள இசை:**
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
**புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:**
திரு. அருந்தவராசா
திரு. பாலா
**ஆலய நிர்மான ஸ்தபதி:** விஸ்வபிரம்மா திரு. குணாளன்

சிவமரத்தினா சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
ஜாதகம் பலன் பார்த்தல் ஜாதக பரிவர்தனை
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

முக்கிய குறிப்பு : 04.07.2026 சனிக்கிழமை காலை 11:30 மணி அளவில் தேர் வடம் பிடித்தல் பக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்
உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அணுகவும்

# இலங்கையில் தமிழர்கள் பாடல்கள் பாடினால் அவர்கள் பயங்கரவாதிகளா?




***"இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை முதலில் ஏவி சிறையிலடைத்த, அநுரகுமார அரசாங்கம் அதன் தொடர்ச்சியாக தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பை மகிமைப்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடினார் என்ற குற்றச்சாட்டில் இளம் தமிழ் பாடகர் ஒருவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்துள்ளதுடன். இன்னும் இரு தமிழ் பாடகர்களை பொலிஸ் நிலையத்திலும் குற்றப்புலனாய்வுப்பிரிவிலும் விசாரணைக்குட்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அச்சுறுத்தும் வேலைகளையும் ஆரம்பித்துள்ளது."***

**கே.பாலா -**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வர தமது சமூக கட்சிகளை புறக்கணித்து அண்ணளவாக சுமார் 10 இலட்சம் வாக்குகள் வரை வழங்கிய முஸ்லிம் மக்களுக்கும் அதேபோன்றே புதிய திசையில் பயணிக்கப்போகின்றோம் எனக்கூறி தமிழ் தேசிய தடம் மாறி தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அண்ணளவாக 7 இலட்சம் வாக்குகள் வரை வழங்கி தமது தமிழ் தேசியக் கட்சிகளைப் புறக்கணித்த தமிழ் மக்களுக்கும் எதிராக அநுரகுமார அரசாங்கம் பயங்கரவாத, அவசரகால சட்டங்களை கையிலெடுத்து தனது உண்மை முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை முதலில் ஏவி சிறையிலடைத்த, அநுரகுமார அரசாங்கம் அதன் தொடர்ச்சியாக தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பை மகிமைப்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடினார் என்ற குற்றச்சாட்டில் இளம் தமிழ்பாடகர் ஒருவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்துள்ளதுடன். இன்னும் இரு தமிழ் பாடகர்களை பொலிஸ் நிலையத்திலும் குற்றப்புலனாய்வுப்பிரிவிலும் விசாரணைக்குட்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அச்சுறுத்தும் வேலைகளையும் ஆரம்பித்துள்ளது.

தென்னிலங்கையில் இருந்து சில இனவாத சமூக ஊடகங்களில் மூலம் கிளப்பப்பட்ட "மனதில் விஷத்தை வாரி இறைக்கும் இசை நிகழ்ச்சி" என்று தலைப்பிட்டு புலனாய்வுப் பிரிவினரதும் பொலிஸாரினதும் கவனத்திற்கு என்ற பதிவுகளையடுத்தே இந்த வடக்கு மாகாணத்தை சேர்ந்த இளம் தமிழ் பாடகர் மீது அநுரகுமார அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தியுள்ளது. இதில் உதய நகர் மேற்கு கிளிநொச்சியைச்சேர்ந்த கணேஷ்குமார் சங்கீத்ஷன் (வயது 24) என்ற பாடகர் 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) இலக்கம் 48 இன் பிரிவு 3(G) கீழ் 2026 ஜூன் 3ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை ஜூன் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 84 வருட காலத்துக்கும் மேலாக நாட்டையும் 5 தசாப்த காலத்திற்கும் மேலாக தமிழ் மக்களையும் அடக்கியாண்டும் அச்சுறுத்தியும் அழித்தும் வரும் பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது அநுரகுமார அரசாங்கத்தில் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. 1942 இலிருந்து தற்போது வரையான 84 வருட காலத்தில் அதிகமான காலம் தமிழ் மக்கள் அவசரகால சட்டத்தினதும் பயங்கரவாத தடைச் சட்டத்தினதும் கீழ்தான் அடக்கியாளப்பட்டார்கள். அழிக்கப்பட்டார்கள். இரட்டைப் பிசாசுகளான, இரட்டைக்குழல் துப்பாக்கிகளான அவசரகாலச் சட்டமும் பயங்கரவாதச் சட்டமும் ஒன்றாகச் செயற்படுத்தப்பட்டால் என்ன நடக்கும் என்பதனை தமிழ் மக்களே அனுபவித்தனர். தற்போது மாற்றங்களுடன் புதிய திசையில் பயணிப்போம் என்ற கோஷத்துடன் ஆட்சிபீடம் ஏறிய அநுரகுமார அரசாங்கத்திலும் எந்த வித மாற்றமுமின்றி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடுமைகளை தமிழ் மக்கள் மீண்டும் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

அப்போதைய ஐக்கியதேசியக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி (UNP) அரசாங்கம், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை 1979 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. ஆரம்பத்தில் இச்சட்டம் 3 ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும் ஒரு அவசரகால தற்காலிக ஏற்பாடாகவே கொண்டு வரப்பட்டது. 3 ஆண்டுகள் தற்காலிக சட்டமாக இருந்த போதிலும், நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் இன முரண்பாடுகள் காரணமாக 1982 இல் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் மூலம் (Act No. 10 of 1982) இச்சட்டம் இலங்கையின் நிரந்தர சட்டப் புத்தகத்தில் இணைக்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக இந்தச் சட்டம் மிகத் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டம் பாதுகாப்புப் படையினருக்கு மிகப்பரந்த அதிகாரங்களை வழங்கியது. நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமல் ஒரு சந்தேக நபரை மாதக்கணக்கில் தடுப்புக் காவலில் வைக்க முடியும். சாதாரண சட்டத்தின்படி பொலிஸாரிடம் வழங்கப்படும் வாக்குமூலம் நீதிமன்றத்தில் செல்லுபடியாகாது. ஆனால், இச்சட்டத்தின் கீழ் உதவி பொலிஸ் அத்தியட்சர் (ASP) அல்லது அதற்கு மேல் பதவியிலுள்ள அதிகாரியிடம் வழங்கப்படும் வாக்குமூலம் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும் (இது சித்திரவதைகளுக்கு வழிவகுப்பதாக குற்றம் சாட்டப்பட்டது). இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை கிடைப்பது மிகக் கடினமான ஒன்றாக இருந்தது. பலர் பல வருடங்கள் விசாரணையின்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். தற்போதும் பல தமிழர்கள் சிறைகளில் வாடுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னரும் இச்சட்டம் நீக்கப்படவில்லை. 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புத் தாக்குதல்களுக்குப் பிறகும், 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு எதிரான மக்கள் போராட்டங்களின் போதும் இச்சட்டம் அரசியல் ஆர்வலர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் (GSP+ வரிச்சலுகை நிபந்தனைகள் மூலம்) மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இச்சட்டத்தை நீக்க வேண்டும் அல்லது சர்வதேச தரத்திற்கு ஏற்ப மாற்ற வேண்டும் என இலங்கைக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களை கொடுத்தன.

இவ்வாறான சர்வதேச அழுத்தங்களின் விளைவாக, 2022 இல் ஒரு சிறிய திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் தடுப்புக்காவல் காலம் 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகக் குறைக்கப்பட்டதுடன், சந்தேக நபர்களுக்குச் சில அடிப்படை சட்ட உரிமைகளும் வழங்கப்பட்டன. எனினும், இந்த மாற்றங்கள் போதுமானதாக இல்லை என மனித உரிமை அமைப்புகள் விமர்சித்தன.

இந்நிலையில் தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு (ஷுயு) பதிலாக மைத்திரி - ரணில் அரசாங்கத்தினால் 2018ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தடுப்புச் சட்ட வரைவும் (Counter Terrorism Act – CTA) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் 2023ஆம் ஆண்டில் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவும் (Anti – Terrorism Act -ATA) முன்வைக்கப்பட்டன. இந்த புதிய சட்டமூலத்திலும் "பயங்கரவாதம்" என்ற வார்த்தைக்கான வரையறை மிகப்பரந்ததாக இருப்பதாகவும், இது ஊடக சுதந்திரம் மற்றும் மக்களின் ஜனநாயக போராட்டங்களை ஒடுக்கப் பயன்படுத்தப்படலாம் என்றும் சிவில் அமைப்புகள் மற்றும் உயர் நீதிமன்ற சவால்கள் மூலம் அச்சங்கள் வெளியிடப்பட்டு, அச் சட்டம் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்றன.

தற்போதைய ஜே.வி.பி.-என்.பி.பி. அரசாங்கத்தின் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க 2024 ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் ஒழித்து நாட்டின் சகல பாகங்களிலும் மக்களின் குடியியல் உரிமைகளை உறுதிசெய்வதாக வாக்குறுதியளித்திருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கு புதிய சட்டம் கொண்டுவரப்படும் என்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால், அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற சில வாரங்களில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தங்களது அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவோ அல்லது திருத்தவோ போவதில்லை என்று அறிவித்தார். புதிய அரசாங்கம் உள்நாட்டிலும் வெளியுலகிலும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகி வந்திருக்கும் அந்தச் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யாது என்று அவர் உறுதியளித்தார்.

இந்நிலையில் இலங்கையின் வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரிய மற்றும் அடக்குமுறைச் சட்டமாகக் கருதப்படும் 1979-ஆம் ஆண்டின் 48-ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) முழுமையாக நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்" (Protection of State from Terrorism Act – PSTA) எனும் புதிய சட்ட மூலத்தை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் 2025 டிசம்பரில் தயார் செய்தது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கப்போவதாக வாக்குறுதியளித்த ஒரு அரசாங்கம் அதே சட்டத்தைப் பதிலீடு செய்வதற்காக தற்போது வெளியிட்டிருக்கும் சட்ட வரைவு முன்னைய இரு அரசாங்கங்கள் கொண்டுவந்த சட்டமூலங்களை விடவும் கொடூரமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

பேராசிரியர் ஜயதேவ உயாங்கொட, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன உள்ளிட்ட மூத்த புத்திஜீவிகள் வெளியிட்ட ஒரு அறிக்கையில், "இப்புதிய சட்டம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்குப் பதிலாக ஒடுக்குமுறையைவே சட்ட பூர்வமாக்குகிறது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. "அனைவருக்கும் நீதி" அமைப்பு புதிய சட்டமூலத்தில் பிரதான சிக்கல்களாக சிலவற்றை சுட்டிக்காட்டியுள்ளது. பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணம் மிகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இது அரசாங்கத்திற்கு எதிரான அமைதியான போராட்டங்களைக் கூட "பயங்கரவாதம்" என முத்திரை குத்த வழிவகுக்கும். பழைய பிடிஏ சட்டத்தில் கைது செய்ய உயர் அதிகாரிகள் அனுமதி தேவைப்பட்டது. ஆனால் புதிய சட்டத்தில் பொலிஸார் மட்டுமன்றி, ராணுவம் மற்றும் கடலோர பாதுகாப்புப் படையினருக்கும் கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிகை இன்றி ஒரு நபரை இரண்டு ஆண்டுகள் வரை தடுத்து வைக்க இது வழிசெய்கிறது. ஜனாதிபதியினால் அமைப்புகளைத் தடை செய்யவும், அவசரகால சட்டத்தை அறிவிக்கவும், பாதுகாப்புச் செயலாளர் சில இடங்களை "தடைசெய்யப்பட்ட இடமாக" அறிவிக்கவும் மேலுயர் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பதில் முகாமைத்துவப் பணிப்பாளர் பாவோலா பம்பலோனி, "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (பிடிஏ) நீக்க வேண்டும் என முன்னர் உறுதியாக இருந்த தேசிய மக்கள் சக்தியினர், இப்போது ஏன் அதற்கு நேரெதிரான சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்?" எனக் கேள்வி எழுப்பிய போது இதற்குப் பதிலளித்த தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், "முதலில் எதிர்க்கட்சியில் இருந்தவர்கள், இப்போது அரசாங்கத்தில் இருக்கிறார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். ஆனால் இப்போதும் பாதுகாப்புத் தரப்பின் வசமே முழுமையான கட்டுப்பாடு இருக்கிறது என்பதையே இது வெளிப்படுத்துகிறது," எனத் தெரிவித்திருந்தார். இதுதான் உண்மையும் கூட.

(தொடர்ச்சி 17 பக்கம்)

# மன்னாரில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பாடகர் சங்கீதனை விடுதலை செய்யக் கோரி பாரிய போராட்டம் முன்னெடுப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்




- எஸ்.ஆர்.லெம்பேட் (11-06-2026)

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகவும் கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் சங்கீதனை விடுதலை செய்யக் கோரியும், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த போராட்டம் 11ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பு இடம் பெற்றது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மன்னார் பிரஜைகள் குழு,மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை சங்கத்தினர், அரசியல் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள் உள்ளடங்களாக நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர்கள் கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.அதன் ஒரு கட்டமாக சொல்லிசை பாடகர் சங்கீதன் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

## பொலிஸார் தலையீடு

கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி வேண்டியும், பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாட்டிலே இல்லாது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக இந்த நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்,கைது செய்யப்பட்ட பாடகர் சங்கீத் உற்பட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறையில் உள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியான முறையில் பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்ட நிலையில் திடீர் என குறித்த பகுதிக்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் பதாகை ஒன்றில் எழுதப்பட்ட வசனம் ஒன்று குறித்து சிறிது நேரம் விசாரணை மேற்கொண்டனர்.

குறிப்பாக குறித்த பதாதையில் அரசே "பயங்கரவாத தடைச்சட்டத்தை" நீக்கு என எழுதப்பட்ட குறித்த வசனத்தை தவறான முறையில் விளங்கிக் கொண்டமையினால் குறித்த நிலை ஏற்பட்டது.

பின்னர் குறித்த பதாதையில் தமிழில் எழுதப்பட்ட வசனம் சிங்கள மொழியில் வாசித்துக் காட்டப் பட்ட நிலையில் பொலிஸார் அவ்விடத்தில் இருந்து சென்றனர். தொடர்ச்சியாக அமைதியான முறையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சுவிஸிலிருந்து வந்து யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயில் வாழ்ந்தவரின் படுகொலை தொடர்பாக இருவர் கைது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



சுவிஸில் இருந்து யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதிக்கு வருகை தந்த முதியவர் ஒருவர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டதுடன் நகை மற்றும் பணம் என்பன களவாடப்பட்டிருந்தன.

குறித்த கொலையை மேற்கொண்ட சந்தேகநபர்கள் தலைமறைவாகி இருந்த நிலையில் 8ம் திகதி திங்கட்கிழமை அன்று அதிகாலை யாழ்ப்பாண பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் இந்த கைது நடவடிக்கை திங்கட்கிழமை அன்று அதிகாலை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவர் தெல்லிப்பழை மற்றும் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இதன்போது அவர்களிடமிருந்து சில சான்றுப் பொருட்களும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள முதலாவது "பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு"!



முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு 12-06-2026 அன்று நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் இசைத் துறையின் தலைவர் கலாநிதி சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

10-06-2026 அன்று யாழ். பல்கலைக்கழக காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், எமது இசைத்துறை பீடமானது 60 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தை கொண்டது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் இலங்கையில் மட்டுமல்லாமல் உலகம் பூராவும் பரந்து காணப்படுகிறனர்.

அந்தவகையில் இசை துறையின் வரலாற்றில் ஒரு மைக்கல்லான முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு நடாத்தப்படவுள்ளது.

12.06.2026 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 9.00 மணியளவில் எங்களுடைய ஆய்வு மாநாட்டின் நிகழ்வுகள் ஆரம்பமாகும். 13.06.2026 மாலை 4.00 மணிக்கு எமது பீடம் சார்ந்து கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்த ஆய்வு மாநாடானது நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வு மாநாட்டிற்கு எங்களுடைய விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மட்டுமல்லாமல் வெளியில் உள்ள பலரும் ஆதரவுகளை வழங்குகின்றார்கள். எனவே இதில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என்றார்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



(15 பக்கத் தொடர்ச்சி)

## இலங்கையில் தமிழர்கள் பாடல்கள் பாடினால் அவர்கள் பயங்கரவாதிகளா?


இவ்வாறான சூழலில் இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. அவ்வாறானதொரு சூழல் தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட, இந்த சட்டத்திற்கு. ஆயிரக்கணக்கான தோழர்களை பறிகொடுத்த அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசியமக்கள் சக்தி இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்ற உறுதி மொழியுடன் ஆட்சிபீடம் ஏறியபோதும் தற்போது தமிழ் மக்களுக்கு எதிராக அநுரகுமார அரசும் இந்தக் கொடிய சட்டத்தையே கையிலெடுத்து தமிழ் மக்களை அடக்கியாளத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சில மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தநிலையில், பின்னர் குற்றச்சாட்டுகள் இன்றி விடுவிக்கப்பட்டனர். மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவினர்கள் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் (TID) தொடர்ச்சியாக அழைக்கப்பட்டு, போராட்டங்களில் பங்கேற்றமை குறித்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இச்சட்டம் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் போக்கு அதிகரித்துள்ளது இதில் ஒன்றாகவே விடுதலைப் புலிகள் அமைப்பை மகிமைப்படுத்தும் வகையில் பாடல்களைப் பாடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், கிளிநொச்சியைச் சேர்ந்த 24 வயதுடைய கணே'குமார் சங்கீத்ஷன் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக பயன்படுத்தும் அநுரகுமார அரசாங்கத்துக்கு எதிரான கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக ஒழிப்பதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், இன்று அதே சட்டத்தை மிக மோசமான முறையில் பயன்படுத்தி, தமிழ் தேசிய உணர்வாளர்கள், கலைஞர்கள்,மற்றும் ஊடகவியலாளர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கத்தின் இந்த இரட்டை வேட அரசியலும் இனவாதத்தைக் கிளறிவிட்டு அர சியல் இலாபம் தேடும் தென்னிலங்கை சதித்திட்டங்களும் நாட்டை மீண்டும் ஓர் அபாயகரமான நிலைக்குத் தள்ளிச் செல்கின்றன.

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான "மனதில் விஷத்தை வாரி இறைக்கும்" எத்தனையோ கருத்துக்களை, காணொலிகளை, நிகழ்ச்சிகளை வெளியிடும் சிங்கள சமூக ஊடகங்கள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்கள் சுட்டிக்காட்டினாலும், முறைப்பாடுகள் செய்தாலும் அநுரகுமார அரசாங்கமோ, பொலிஸாரோ, புலனாய்வுத் துறையோ கண்டுகொள்ளாத நிலையில் தென்னிலங்கையில் இருந்து சில இனவாத சமூக ஊடகங்கள் மூலம் கிளப்பப்பட்ட "மனதில் விஷத்தை வாரி இறைக்கும் இசை நிகழ்ச்சி" என்று தலைப்பிட்டு புலனாய்வுப் பிரிவினரதும் பொலிஸாரினதும் கவனத்திற்கு என்ற பதிவுகளையடுத்து துள்ளிக்குதித்து பயங்கரவாத தடைச்சட்டத்தை கையிலெடுத்துள்ள அநுரகுமார அரசாங்கம் தொடர்பில் ஆச்சரியப்படவோ அதிர்ச்சியடையவோ எதுவுமே இல்லை. ஏனெனில் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே..வி.பி.யினரின் இரத்தத்தில் "தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்" கலந்துள்ளது. அதனை பிரித்தெடுக்க முடியாது. எனவே "மாற்றம், புதிய திசைகாட்டி, தோழர்கள்" எனப் பிதற்றும் தமிழ், முஸ்லிம் இளைய தலைமுறையினர் ஜே.பி.பி.-தேசிய மக்கள் சக்தியினரின் உண்மை முகத்தை தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.




## இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம் 'இருக்கிறதா? இல்லையா?

இ டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளின் பின்னர், அநுர குமார திஸாநாயக்க அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான" (சுநடிரடைனவைபெ ளுசை டுயமெய குரனெ) நிதியம் தொடர்பாக எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு மத்தியில், அமைச்சர்கள், திறைசேரி அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் முரண்பாடான கருத்துக்கள் காரணமாக, பில்லியன் கணக்கான ரூபாய் நிவாரண நிதிகளின் முகாமைத்துவம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.
இது தொடர்பாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் (ஊழீகு) தலைவரால் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தினால் சட்டப்பூர்வமாக நிறுவப்படாத ஒரு நிதியம் குறித்தே அரசாங்கம் குறிப்பிடுகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாதாடுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்' டி சில்வா, இந்த நிதியத்தின் சட்டப்பூர்வத்தன்மை குறித்து பகிரங்கமாகக் கேள்வி எழுப்பியுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஆகு) திட்டத்திற்குரிய, நிதிச் சட்டக்கட்டமைப்பின் கீழ், நாடாளுமன்ற சட்டமொன்றின் ஊடாக நிறுவப்பட்ட சட்டரீதியான நிதியங்கள் மாத்திரமே சட்டப்பூர்வமாக இயங்க முடியும் என தெரிவித்துள்ளார்.
"எனவே, அத்தகைய நிதியம் எதுவும் இல்லை," எனக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்' டி சில்வா, பணம் சேகரிக்கப்பட்டு வைப்பு செய்யப்பட்டிருந்தாலும், சட்டப்பூர்வமாக நிறுவப்பட்ட "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம்" எதுவும் உருவாக்கப்படவில்லை என்றும் வாதிட்டார். இது தொடர்பாக சமூக ஊடகங்களில் பதிவொன்றை வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், "பொறுப்புக்கூறல் எங்கே? நிதியைக் கண்காணிப்பது யார்? நாடாளுமன்றம் ஏன் இதனை ஒரு சட்டரீதியான நிதியமாக அங்கீகரிக்கவில்லை?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.
"சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக பில்லியன் கணக்கான நன்கொடைகள் சேகரிக்கப்பட்ட போதிலும், இந்த நிதியம் இன்னும் சட்டப்பூர்வமாக நிறுவப்படவில்லை. முறையான மேற்பார்வையோ அல்லது தணிக்கையோ இன்றி இப்பணம் திறைசேரியின் பொதுக் கணக்கொன்றில் வைக்கப்பட்டுள்ளது." பொது நிதி மற்றும் டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான வெளிப்படைத்தன்மையையே தான் கோருவதாக அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றக் குழுக்கள் முன்னிலையில் அரச அதிகாரிகள் விடுத்த அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில், இப்பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது. அண்மையில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டமொன்றில், இந்த நிதியத்திற்காக இன்னும் உத்தியோகபூர்வ கணக்கொன்று நிறுவப்படவில்லை என்றும், அதற்குப் பதிலாக திறைசேரிக்குரிய கணக்கொன்றிற்கே நன்கொடைகள் வந்துகொண்டிருக்கின்றன என்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளனர்."
"இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம்" ஒரு சட்டரீதியான நிதியமாக முறைப்படி நிறுவப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம், அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு (ஊழீகு) அறிவித்துள்ளது. அதற்குப் பதிலாக, திறைசேரியின் பிரதிச் செயலாளரால் நிர்வகிக்கப்படும் விசேட கணக்கொன்றில் இந்த நன்கொடைகள் பேணப்பட்டு வருவதுடன், தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளபடி "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியத்திற்குரிய" எந்தவொரு பணமும் இதுவரை பயன்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது."
"அதற்கு வந்த பணத்தில் இருந்து எதுவும் பயன்படுத்தப்படவில்லை. ஏனெனில் நாங்கள் எங்களது தேவைக்காகத் தகவல்களைப் பெற்றபோது அது பற்றிக் கேட்டிருந்தோம்," எனக் குறிப்பிட்டுள்ளதேசிய கணக்காய்வு அலுவலகம், "(அந்தப் பணம்) திறைசேரியில் உள்ளது," எனவும் தெரிவித்துள்ளது."

"பில்லியன் கணக்கான நன்கொடைகள் கிடைத்துள்ள "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம்" தொடர்பாக அமைச்சர்கள் தொடர்ச்சியாகப் பகிரங்கமாக விடுத்து வந்த அறிக்கைகளுடன் இந்த நிலைப்பாடு ஒத்துப்போகவில்லை என்பது முதல் நோக்கிலேயே தெளிவாகத் தெரிகிறது."
"இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, "இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம்" பாதுகாப்பாக உள்ளதாகப் பொதுமக்களுக்கு உறுதியளித்துள்ளதுடன், 2026 ஏப்ரல் மாதமளவில் இந்த நிதியத்தில் கிட்டத்தட்ட 10 பில்லியன் ரூபாய் வைப்பிலிடப்பட்டுள்ளது என்றும், இப்பணம் அங்கீகரிக்கப்பட்ட பொதுத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரிலுள்ள கணக்குகளுக்கே இந்த நிதிகள் வைப்பிடப்பட்டதுடன், நிதிகள் பாதுகாப்பாக உள்ளதால் "அச்சமடையத் தேவையில்லை" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்."
"அப்படியென்றால் மொத்தமாகவுள்ள 500 பில்லியனில் சுமார் 10 பில்லியன் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்தச் செலவுகள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதை வருட இறுதியில் எம்மால் வழங்க முடியும்," எனக் குறிப்பிட்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, "ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 500 பில்லியனில் 200 பில்லியனுக்கும் அதிக தொகை செலவழிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது. அந்த வகையில் பார்த்தால், தேவைப்பட்டால் அந்த 10 பில்லியனும் இந்த 200 பில்லியனுக்குள் செலவழிக்கப்பட்டதாக எம்மால் கணக்குகளைச் சமர்ப்பிக்க முடியும்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்."
"இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிதியம்" குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதி செயலகத்திடம் கோரப்பட்ட தகவல் கோரிக்கைக்குக் கிடைத்த பதில்களை, வெலிகம ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் அமைப்பாளர் ரெஹான் ஜயவிக்ரம சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார்."

"இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான" நிதியத்திற்கு 6.1 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணமும், 11.4 மில்லியன் அமெரிக்க டொலர்களும் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தற்போது உறுதிப்படுத்தியுள்ள போதிலும், நன்கொடையாளர்களின் விபரப் பட்டியல், கொடுப்பனவுகள், நிதியைப் பெற்றுக்கொண்டவர்கள், கொள்முதல் விபரங்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் மேற்பார்வை அறிக்கைகள் ஆகியவற்றை கோரிய போது, அந்த விபரங்கள் ஜனாதிபதி செயலகத்திடம் இல்லை என்பதே பதிலாகக் கிடைத்தது." என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
"அதைவிட ஆச்சரியமான விடயம் என்னவென்றால், கணக்காய்வு அறிக்கைகளும் இல்லை என்றே அவர்கள் கூறுகிறார்கள்," என வெலிகம ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் அமைப்பாளர் ரெஹான் ஜயவிக்ரம தனது எக்ஸ் (ஓ) கணக்கில் வெளியிட்ட பதிவொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

# "தொழில்நுட்ப வளர்ச்சியால் அச்சு ஊடகங்கள் மங்கிச் செல்கையில், கனடாவில் "உதயன்" ஊடகம் தொடர்ந்து 30 ஆண்டுகளாக சேவையாற்றுவது சாதனையாகும்"

## இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், கனடாவின் ஸ்காபுறோவில் நடைபெற்ற "உதயன்" சர்வதேச விருது விழாவில் புகழாரம்



"இன்றைய சூழலில் கையில் கைப்பேசி வைத்திருக்கின்ற அனைவரும் ஊடகவியலாளர்களாக மாறியுள்ள சூழலில் அச்சு ஊடகங்கள் கடுமையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியால் அச்சு ஊடகங்கள் மங்கிச் செல்லும் காலகட்டத்தில், கனடாவில் "உதயன்" போன்ற ஊடகங்கள் தொடர்ந்து 30 ஆண்டுகளாக சேவையாற்றுவது அளப்பரிய சாதனையாகும். இது கனடியத் தமிழ் சமூக வரலாற்றின் முக்கிய அத்தியாயமாகும்" அத்துடன் கனடியத் தமிழர்களின் ஒரு அடையாளமாகவும் "உதயன்" பத்திரிகை திகழ்வதை நான் உணர்கின்றேன்".








இவ்வாறு இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன், கனடாவின் ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற "உதயன்" சர்வதேச விருது விழாவில் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டார் மேற்படி விழாவில் அவர் உரையாற்றும்போதே அவர் உதயன் பத்திரிகையையும் பாராட்டினார். கனடாவில் 30 ஆண்டுகளாக ஊடகப் பணியாற்றி வரும் உதயன் ஊடகக் குழுமத்தின் நிகழ்வுகளில் பங்கேற்பதை மகிழ்ச்சியான பொழுது ஒன்றாகக் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

உதயன் ஊடகம் கடந்த 30 ஆண்டுகளாக கனடாவில் தமிழ் ஊடகச் சேவையை முன்னெடுத்து வருவதுடன், கடந்த 20 ஆண்டுகளாக ஊடக விருதுகளையும் வழங்கி வருவதாகக் குறிப்பிட்ட மனோ கணேசன், அந்நிறுவனத்தின் பங்களிப்பை உயர்வாகப் பாராட்டினார்.

தொடர்ந்த அந்த விழாவில் இலங்கை அரசியல் குறித்து கருத்து வெளியிட்ட மனோ கணேசன், பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

"விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேரில் சந்தித்துள்ள உயிருடன் இருக்கும் அரசியல்வாதிகளில் ஒருவன் நானாக இருக்கிறேன். தற்போதைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க எனது நீண்டகால நண்பர். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அவருடன் அரசியல் நட்பு இருந்து வருகிறது. இன்று அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராகவும், நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராகவும் உள்ளோம்".

"இன்று இலங்கையில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அரசாங்கத்தை விட அதிகம் மக்கள் மத்தியில் அறியப்பட்டவராக உள்ளார். ஆளும் தரப்பில் 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும், அவர்களில் பலரின் பெயர்களைக் கூட மக்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் ஜனாதிபதியின் பெயர் மட்டுமே பரவலாக அறியப்படுகிறது"

"ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே கடினமான சீர்திருத்தங்களை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் இரண்டாவது ஆண்டை எட்டியுள்ள நிலையில் பல முக்கிய விடயங்கள் தாமதமாகியுள்ளன. அநுர அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட பல வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்பதும் கவலையளிக்கும் விடயமாகும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும் என கூறப்பட்டது. ஆனால் அது இன்னும் நடைமுறையில் உள்ளது. மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. காணி பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை. இவை குறித்து நான் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கூறியுள்ளேன். மீண்டும் கனடா மண்ணிலிருந்தும் அவற்றை நினைவூட்டுகிறேன்".

"நாங்கள் அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் மக்கள் முன்னிலையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதை மக்கள் அறிய வேண்டும். முன்பு சர்வதேச நாணய நிதியம் (IMF) தொடர்பாக போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், இன்று அதே IMF திட்டங்களுக்கு ஆதரவளித்து வருகின்றனர்".

1987ஆம் ஆண்டு இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரித்தது ஜே.வி.பி.யின் அரசியல் நிலைப்பாடுகளுடன் தொடர்புடையதாக இருந்ததாகக் குறிப்பிட்ட மனோ கணேசன், "வரலாற்றை மாற்ற முடியாது. இன்று தேசிய மக்கள் சக்தி (NPP) பல கொள்கைகளை மாற்றிக்கொண்டுள்ளது. அதுபோல தேசிய இனப் பிரச்சினை தொடர்பான அணுகுமுறைகளிலும் மாற்றம் தேவை" என்றார்.

தனது உரையில் இலங்கையில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டுள்ள சங்கீதன் கைது தொடர்பாகவும் அவர் கண்டனம் தெரிவித்தார். அண்மையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ராப் பாடகர் சங்கீதன் தொடர்பாகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

"முன்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிராகப் பேசியவர்கள் இன்று மௌனமாக இருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை நீக்குவதாக கூறியவர்களே, அதே சட்டத்தின் கீழ் ஒருவரை கைது செய்துள்ளனர். சட்டம் அனைவருக்கும் ஒரே மாதிரியாகப் பயன்படுத்தப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கைதுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது" என்று அவர் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களுக்கு விடுத்த அழைப்பில் மனோ கணேசன் அவர்கள் பல விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

கனடாவில் வாழும் தமிழ் சமூகத்தினரின் பங்களிப்பைப் பாராட்டிய மனோ கணேசன், "உழைப்பாலும் திறமையாலும் உயர்ந்துள்ள கனடியத் தமிழ் சமூகம், தாயகத்தின் வளர்ச்சிக்காக தங்களின் நிதி மற்றும் அறிவாற்றல் பங்களிப்புகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். தாயகத்தின் மறுமலர்ச்சியில் புலம்பெயர் சமூகத்தின் பங்கு மிகவும் முக்கியமானது" என்றார்.

தனது "கிளிநொச்சி" என்னும் திரைப்படத் திட்டம் குறித்தும் அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட மனோ கணேசன் அவர்கள் தனது கனடா பயணத்திற்கான மற்றொரு நோக்கமாக "கிளிநொச்சி" திரைப்படத் திட்டம் உள்ளதாகவும் மனோ கணேசன் வெளிப்படுத்தினார்.


"எனக்குள் சினிமா மீதான ஆர்வம் இன்னும் உள்ளது. "கிளிநொச்சி" என்ற திரைப்படத் திட்டத்திற்காகவும் கனடா வந்துள்ளேன். இது ஒரு காதல் கதையாக அமையும். கதைக்களம் கனடா - இலங்கை - இந்தியா என்ற பாணியில் திட்டமிட்டிருக்கிறோம்." என்று அவர் தெரிவித்தார். மக்கள் அவரது உரையை அமைதியாக இருந்து செவிமடுத்தார்கள்.

***- Uthayan LJI Journalist Arjune -***



Hari Om

Honorary Guest



Logendralingam



**திருமதி/திரு லோகந்திரலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.**
**உதயன் நியூஸ் 30-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் மற்றும் 20-வது ஆண்டு விருது வழங்கும் விழாவிற்கு வாழ்த்துக்கள்.**
**2018 ஆம் ஆண்டு நடைபெற்ற எங்களின் 17-வது ஆண்டு விழாவில் நீங்கள் எங்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டீர்கள்.**
ஜூன் 28, 2026 அன்று நடைபெறவிருக்கும் எங்களின் 25-வது ஆண்டு விழாவின் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ள எங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டதற்கும், உங்கள் ஆதரவிற்கும் மிக்க நன்றி.
**நியூயார்க் ராஜா SAREGA Music இசை அமைப்பாளர்/இசை ஆசிரியர்**

***INVITATION***

# ***** 25th Annual Celebrations *****

**அனுமதி இலவசம் | ALL ARE WELCOME !**

**Sunday June 28th 2026 3 PM-9 PM**

Michael Power St Joseph School 105 Eringate Drive. Etobicoke, ON M9C 3Z7

Sponsored by


THE KUDDY FOUNDATION | KG TRUCK GROUP | Leela Super Market | உதயன்

CONTACT 416 884 7288

***Students of New York-Raja performing with the Celebrity Singer Maharajapuram Ramu (a replica of Sri SPB Sir's Voice) & Popular Singers & Musicians of the GTA respectfully dedicate this show to their Parents***

Maharajapuram Ramu





Prabha



Nandita



Sarika



Ajeesh



Shenaal



Shenaya



NewYork Raja



Sahithya/Keys



Kavya/Bass



Suresh/Drums



Mahthesh/Tabla

CONTACT 416 884 7288

**Students Orchestra Supported by 'SAHITHYA's BAND**

THE KUDDY FOUNDATION | KG TRUCK GROUP | Leela | cmr | tvi HD | உதயன் | east FM 102.7 | Bucket BIRYANI

*******This Show is to Encourage, Appreciate & Honour the Students on their Accomplishments, and Showcase their talents on the Stage*******

**This is possible with the generous support of our Sponsors & Parents of the Students!**

**Gold Sponsors/TKF The Kuddy Foundation & KG Truck Group | Hospitality Sponsor/Leela Super Market**

**Media Sponsors: Uthayan News | Tamil Osai | CMR/TVI | East FM**

# இவ்வார ராசிபலன்

**12-06-2026 வெள்ளி தொடக்கம் 18-06-2026 வியாழன் வரையும்**




**மேஷம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். காதல் கை கூடும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மதிப்பும், மரிதையும் உயரும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் தரும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப்போடவும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். ஆணவத்தை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். நல்ல நேரத்தையும், நன்மையான காலத்தையும் உண்மையாக சந்திக்கக்கூடிய காலம். மௌன விரதம் இருப்பது நல்லது. தொடுத்த வெற்றியை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**ரிஷபம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். ஆதாயம் மிகுதியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோக உயர்வு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஏராள நன்மைகள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை அடையும் காலம். எதிரிகள் தொல்லைகள் குறையும். தனவரவு அதிகரிக்கும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனைகள் அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். காசு, பணம் சேர்க்கை அதிகரிக்கும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். ஏற்றங்கள் அதிகரிக்கும் காலம். பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். ஆதாயம் பெருகக்கூடிய காலம். கல்வியால் செலவு ஏற்படும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: *6,4,3,2*
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**மிதுனம்:** உழைப்பால் மதிப்பு சேரும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு உண்டு. நன்மதிப்பு பெருகும். பாராட்டுக்கள் கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கசந்த காலம் விலகும். வசந்த காலம் உருவாகும். வலிமையான காலமாக அமையும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப்பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். சுப காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்புத்தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பயணம் நன்மைத் தரும். அச்சத்தைத் தவிர்ப்பது நல்லது. உச்சத்தை அடையும் காலம் ஏற்படும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை ஏற்படும். உறவினரால் தொல்லை ஏற்படும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். சாதனை நிகழ்த்தக்கூடிய காலம். மேன்மைகள் அதிக அளவில் பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: *9,7,5,3*
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**கடகம்:** சவாலான விஷயங்களை சமாளிக்கும் வாரம். சினத்தை தவிர்ப்பது நல்லது. பணச்சேர்க்கை உண்டு. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். மன சந்தோஷம் கூடும். மருத்துவச் செலவு கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். காரிய அனுகூலம் தரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வெற்றி கிடைக்கக்கூடிய காலம். நல்லவராக இருப்பீர்கள். வல்லவராக வாழ விரும்புவீர்கள். கனவுகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். தகுதியோடும், மிகுதியோடும் வாழக்கூடிய காலமாக அமையும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. குதூகலம் சேரும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். தீய எண்ணம் விலகும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். திடீர் தனவரவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். மரியாதையான குணம் அதிகரிக்கும். இனிய நட்புக்கள் உருவாகும். பெரிய வெற்றி கிடைக்கும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: *7,4,1,9*
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K




**சிம்மம்:** எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும் வாரம். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். தர்மச் சிந்தனையும் மேலோங்கும். வெற்றிகள் குவியும். எதிரிகள் உதிரியாவார்கள். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிறப்புக்களை சந்திப்பார்கள். கஷ்ட காலங்கள் விலகும் காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். திடீர் வரவுகள் உண்டு. ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். மங்களச்செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரிய வெற்றி கிடைக்கும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். நன்மைகள் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: *4,7,9,2*
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**கன்னி:** நினைத்தது நடக்கும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். கலை ஆர்வம் பெருகும். உடல் உஷ்ணம் உண்டாகும். விபரீத போக்கு மாறும். பூர்வீக சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். துன்பங்கள் விலகும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனைத் திறன் அதிகரிக்கும். கஷ்ட காலங்கள் விலகி அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பூர்வீக சொத்து கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதாரம் வளர்ச்சி பெருகும். மிகையான நன்மை கிடைக்கும். ஆறு வகையான செல்வங்கள் அமைதியாக கிடைக்கும் காலம். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**துலாம்:** இல்லம் வளர்ச்சி அடையும். கலையான தோற்றமும், கனிவான பேச்சும் அவசியம். தெளிவான சிந்தனையால் மலிவான நட்புக்கள் விலகும். தந்தையால் நலம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழும் காலம். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அகலும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இனிய வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. தெய்வ கடாட்ஷம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கைப்பொருள் களவுப்போகும். விவசாயம் லாபம் தரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: *1,4,5,9*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Z

(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1200



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கண்ணகி அம்மன் ஆலயம்
## வற்றாப்பளை

அதன் பின்னர் சிறுவர்களை நோக்கி, "தலையிலே கடிக்கிறது பேன் பார்த்துவிடுங்கோ" என்று கேட்டார். சிறுவர்களும் சம்மதித்துப் பேன் பார்க்கத் தலைமுடியை விரித்தபோது, தலை முழுவதும் ஓட்டையாக, அதிலே கண்கள் இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மூதாட்டியை நோக்கி "என்ன ஆச்சி தலைமுழுக்க ஓட்டையாகக் கண்கள் இருக்கின்றதே" என்று சிறுவர்கள்கூற, தான் யார் என்பதை அச்சிறுவர்களுக்குத் தெரியப்படுத்தினார். "பிள்ளைகளே நான்தான் கண்ணகி, மதுரையிலிருந்து வருகிறேன். ஒவ்வோரிடமாகச் சென்று, இது நான் வந்த பத்தாவது இடம், ஒவ்வொரு வருடமும் இத்தினத்தில் இங்கு வருவேன்" என்று கூறினார். இவ்வாறு சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த தினம், வைகாசி மாதத்திலே வரும் விசாகமும், பறுவமும் ஒன்றிணைந்த பூர்வபட்ச சப்தமித் திதியில் வரும் திங்கட்கிழமையாகும்.

சிறுவர்கள் தமக்கேற்பட்ட அனுபவத்தை வீட்டிலுள்ள பெரியோர்களிடம் கூறியபோது, அவர்கள் இக்கதைகளை நம்ம மறுத்தார்கள். ஆனால் அன்றிரவு கண்ணகித் தெய்வம், அவர்கள் கனவில் தோன்றித், தான் யாரென்பதை உணர்த்தினார். இதன் பின்னர் ஊரிலுள்ளோர்க்கு இக்கதை பரவ, அனைவரும் சிறுவர்கள் பொங்கிப் படைத்த இடத்திற்குச் சென்றனர். பொங்கிப்படைத்த அடையாளங்களைக் கண்டு உண்மையுணர்ந்தனர். அத்தோடு மூதாட்டியார் அமர்ந்திருந்த வெட்டப்பட்ட வேப்பமரக் குற்றியில் தளிர்விட்டுக் காணப்பட்டதைக் கண்டு வியப்படைந்தனர். இச்சம்பவத்தின் பின்னர் அவ்விடத்திலிருந்த வேப்பமரத்தடியில், சிறிய கோவிலொன்றை அமைத்து, அதில் கண்ணகிக்குச் சிலை வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறான நிலையிலேயே வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் தோற்றம் பெற்றதென வாய்மொழிக்கதைகள் மூலம் அறிய முடிகின்றது.

தற்காலத்திலே வற்றாப்பளை என அழைக்கப்படும் கிராமம், ஆரம்பகாலத்தில் கண்ணகி ஆலயம் தோன்றிய காலந் தொட்டு, பத்தாம்பளை என்ற காரணப் பெயராலேயே அழைக்கப்பட்டது. கண்ணகி சிறுவர்களை நோக்கி, அவ்விடத்திற்குப் பத்தாவது இடமாக வந்துள்ளேன் என்று கூறிய பின், அக்கால மக்களால் பத்தாம்பளை என்றே அழைக்கப் பட்டது. பின்னர் இப் பெயர் வற்றாப்பளை என மாறியதற்கும் காரணம் கூறப்பட்டுள்ளது. பொங்கல் காலங்களில் பெருந்திரளான மக்கள் இங்கு வருகை தந்து பொங்கலிடுவதால், அன்றையதினம் மாலையில் இப்பகுதியில் காணப்பட்ட கேணியில் நீர் குறைந்து மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இதனால் 1949 ஆம் ஆண்டளவில் இப்பகுதியை ஆய்வு செய்த நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள், அண்மையிலுள்ள குளம் தூர்ந்து கிடப்பதைக் கண்டறிந்தனர். அதன் பின்னர் அதனைத் திருத்தி, அருகிலுள்ள கேணிக்குள் நீர்பெருக ஏற்பாடு செய்யும் வடிகால் முறையை அமைத்தனர். அதன் பின்னர் பொங்கல் காலங்களில் மட்டுமன்றி, வரட்சிக்காலங்களிலும் இக்கேணியில் நீர் வற்றுவதில்லை யென்றும், இக்காரணத்தினால் "நீர் வற்றாதஊர்" என்ற கருத்தில், வற்றாப்பளை என அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர் பத்தாம்பளை என்பது மறைந்து வற்றாப்பளை என அழைக்கப்படுகின்றது.

கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடையது வேம்பு. அவ்வாறே வற்றாப்பளை கண்ணகிஅம்மன், சிறுவர்களோடு உரையாடும்போது, கலப்பை செய்ய வெட்டிப் போடப் பட்டிருந்த வேப்பங்குற்றியிலேயே தங்கியிருந்தார். பின்னர் மக்கள் சென்று பார்க்கும்பொழுது பட்டமரக்குற்றியில் தளிர் விட்டுக் காணப்பட்டது. இச்சம்பவத்தின் பின் கண்ணகி வழிபாட்டோடு வேப்பமரமும் இப்பகுதி மக்கள் வாழ்கையோடு இரண்டறக் கலந்து விட்டது. வேப்பமரத்தின் சகல பகுதிகளும், இப்பகுதி மக்களால் பல்வேறு தேவைகட்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குளிர்ச்சியும், மருத்துவத் தன்மையும் கொண்டது வேம்பு. இப்பகுதியிலுள்ளவர்கள் அம்மை, சின்னமுத்து, கொப்பளிப்பபான்

போன்ற நோய்கள் ஏற்படும் பொழுது, அம்மனுடைய வழிபாட்டில் ஏற்பட்ட குறையாலேயே இந்நோய்கள் ஏறபடுவதாகக் கருதும் ஒரு வழக்கம் இப்பகுதியிலே காணப்படுகின்றது.

இவ்வாறான நோய்கள் ஏற்படும்போது, நோயுற்றோரைத் தனிமைப்படுத்தி, அவர்களைப் பரிசுத்தமாகப் பேணுவர். அத்தோடு நோயுற்றவர் தங்குமிடமெங்கும், வேப்பிலைகளைப் பரவி, வேப்பிலைப் படுக்கையிலேயே படுக்க வைப்பர். நோயுற்ற காலப்பகுதியில் புலால் உண்ணுதலையும் தவிர்ப்பர். இக்காலத்தில் அம்மன் வழிபாடும் செய்யப்படும். குறிப்பிட்ட காலத்தின் பின் சுகமடைந்ததும், முதலில் கண்ணகை அம்மனைத் தரிசித்து வணங்கிய பின்பே, வெளியிடங்களுக்குச் செல்வர். இவ்வாறே பாம்புக் கடிக்கும் வேம்பின் பாகங்கள் மருந்தாகப் பயன்படுத்தப்படடு வி'த்திலிருந்து மீட்சி பெறுவர். கண்ணகி அம்மன் இருக்கையாகப் பாவித்து, கிளைவிட்ட மரம் வளர்ந்து செழித்துக் காணப்பட்டது. இப்பகுதி மக்கள் தமக்கேற்படும் நோய் பிணியிலிருந்து தப்ப, இம்மரத்தின் பட்டைகளையும், கிளைகளையும் பயன்படுத்தியமையாலும், கால முதிர்ச்சி யாலும், இந்த வேப்பமரம் அழிந்து விட்டதாக இப்பகுதி மக்கள் கூறுவர்.

ஈழத்தின் பல பகுதிகளிலுமுள்ள கண்ணகைஅம்மன் வழிபாடு, ஏனைய கிராமியத் தெய்வவழிபாட்டினின்றும் சற்று வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. பெரும்பாலும் கண்ணகைஅம்மன் கோவில் பொங்கல், வைகாசி மாதத்திலேயே நடைபெறும். பொங்கலுக்குச் சிலநாட்களுக்கு முன் கோவிலைத் திறந்து, கண்ணகை அம்மன் கதை படிக்கப்படும். கடைசித் தினத்தன்று இரவிரவாக கதை படிக்கும் வழக்கமுண்டு. அன்றைய தினம் மக்கள் கோவிலுக்கு வந்து, புதுச் சட்டி பானையிலே பொங்கலிடுவர். காவடிகளும், பாற் செம்புகளும் பெருந்தொகையாகப் பல்வேறிடங்களிலும் இருந்து கோவிலுக்கு வந்து சேரும். பின்னர் பூசை நடைபெறும். இவ்வாறான நடைமுறை கண்ணகி வழிபாட்டில் பொதுவானதாகக் காணப்பட்டபோதிலும், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் வழிபாடு இவற்றிலிருந்து சற்று மாறுபட்டே காணப்படுகின்றது.

வற்றாப்பளைக் கண்ணகைஅம்மன் கோவிலில், வைகாசிப் பொங்கலும், தீர்த்தமும் முக்கியமான விழாக்களாகக் கருதப்படுகின்றன. வைகாசி மாதத்திலே வருகின்ற எல்லாத் திங்கட்கிழமைகளும் சிறப்பானவையாகக் கருதப்படும். இவற்றுள் முதல் மூன்று திங்கட் கிழமைகளும் அதி விசேசமானதாகக் கருதப்படுகின்றது. முதலாவது திங்கட்கிழமையில் பாக்குத்தெண்டல் என்னும் கருமம் நிறைவேற்றப்படும். இச் செயலின் மூலம் கண்ணகையம்மன் பொங்கலைப்பற்றி அனைவருக்கும் அறிவிப்பர்.

**வளரும்..**

சினிமா

# ஹிப்ஹாப் தமிழா ஆதியின் "பொருநை" ஆவணப்படம் சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடத் தேர்வு செய்யப்பட்டது

ஹிப்ஹாப் தமிழாவின் தமிழன்டா இயக்கத்தின் முன்னெடுப்பில், ஹபொரு-நை" என்ற ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. தாமிரபரணி என்று அழைக்கப்படும் ஹபொருநை" நதிக்கரையில் 2020-2021 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அகழாய்வுப் பணிகளை முழுமையாக பதிவு செய்து இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. பொருநை ஆவணப்படத்தை ஹிப்ஹாப் தமிழா எண்டர்டெயின்மெண்ட் நிறுவன தய-ாரிபில் பிரதீப்குமார் - இளங்கோ சம்பத்குமார் ஆகியோர் இந்த ஆவணப்படத்தையும் இயக்கியுள்ளனர். பல்வேறு சர்வதேச திரைப்பட விழாக்களுக்கும் அனுப்பட்டுள்ள இப்படம் தற்போது துருக்கியில் திரையிட தேர்வாகியுள்ளது. வரும் அக்டோபர் மாதம் நடைபெறும் திரையிடலில் "பொருநை" ஆவணப்படம் திரையிடப்படவுள்ளது.

தொல்லியல், பண்பாடு உள்ளிட்ட துறைகளில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த திரைப்பட விழாவில் திரையிடப்படவுள்ள முதல் தமிழ் ஆவணப்படம் "பொருநை" என்பது குறிப்பிடத்தக்கது. ஹிப் ஹாப் ஆதி 2019-ம் ஆண்டு தமிழ் எழுத்து வடிவத்தின் பரிணாமம் குறித்து "தமிழி" என்ற ஆவணப்பட தொடரை வெளியிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து தற்போது தொல்லியல் அகழ்வாராய்ச்சி தொடர்பாக ஒரு ஆவணப் படத்தை உருவாக்கியுள்ளார்.

"பொருநை" ஆவணப்படம் தொடர்பாக ஹிப் ஹாப் ஆதி கூறும்போது, "2016-ல் தொடங்கி 2019 வரை நான்கு வருடம் தமிழ் எழுத்துகள் எவ்வாறு உருவானது என்பது பற்றிய ஒரு வரலாற்று ஆவணப் படத்தை உருவாக்கினோம். அது எல்லா தரப்பிலும் வரவேற்பு பெற்றுத் தந்தது. இந்த ஆவணப் படம் முடியும் தருவாயில் "பொருநை" என்ற தமிழ் தொல்லியல் ஆராய்ச்சி ஆவணப் படம் உருவாக்குவது பற்றி முடிவு செய்து அதற்கான பணிகளை மேற்கொண்டோம். 2021-ம் ஆண்டில் தமிழக அரசு சார்பில் தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் தமிழர்களின் தொல்லியல் ஆராய்ச்சியைக் கண்டறிய பல்வேறு இடங்களைத் தேர்வு செய்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பணிகள் தொடங்கிய போது, அவர்களது அனு-மதியுடன் அந்த பணிகளை ஆவண படமாக்க 2021 முதல் படப்பிடிப்பைத் தொடங்கினோம். இந்த ஆராய்ச்சியில் நிச்சயம் பெரிய கண்டுபிடிப்புகள் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து கூறி வந்தனர். எங்களுக்கும் அந்த நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இந்த ஆராய்ச்சியில் உண்மையானது. இரும்பு கண்டுபிடிக்கப்பட்டது துருக்கி நாட்டில் உள்ள ஒரு பகுதியில் என்று குறிப்பிடப்பட்டு வந்தது. தற்போது அந்த வரலாறு மாறி இருக்கிறது. இரும்பு கண்டுபிடிக்கப்பட்டது, அதாவது பழமையான இரும்பு கலாச்சாரம் தமிழகத்தில் தான் தோன்றியது என்ற வரலாற்று உண்மை வெளியாகி இருப்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது" என்றார்.




# கவுதம் ராம் கார்த்திக்கின் "ப்ளடி பாலிடிக்ஸ்" படத்தின் படப்பிடிப்பு நிறைவு பெற்றுள்ளது

நடிகர் கவுதம் ராம் கார்த்திக் நடிக்கும் "ப்ளடி பாலிடிக்ஸ்" படத்தை தினா ராகவன் தயாரித்து வருகிறார். தினா ராகவன் எழுதி, இயக்கும் இந்தப் படம் கவுதம் ராம் கார்த்திக்கின் 19-ஆவது திரைப்படம் ஆகும். கணேஷ் கே. பாபு புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் இந்தப் படத்தில் செல்வராகவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்திற்கு இயக்குநர் ராஜுமுருகன் வசனம் எழுதியுள்ளார். சாம் சி.எஸ். இசையமைத்துள்ள இந்தப் படத்தின் பாடல்களை யுகபாரதி, கணேஷ் கே பாபு மற்றும் சௌமியா பாரதி ஆகியோர் எழுதியுள்ளனர்.

இப்படத்தின் தலைப்பு முன்னோட்டத்தை இயக்குனர் மாரி செல்வராஜ் வெளியிட்டிருந்தார். இதில் அஞ்சனா நேத்ருன், செல்வராகவன், ரோபி, பி.வாசு, வெங்கடேஷ், மாறன், இந்துமதி, ஆதித்யா கதிர், பாக்கியம் சங்கர் உள்ளிட்ட பலர் கவுதம் ராம் கார்த்திக் உடன் நடித்துள்ளனர். வலுவான அரசியல் பின்னணி கொண்ட படமாக இருக்கும் என்பது "ப்ளடி பாலிடிக்ஸ்" முன்னோட்டம் மூலம் உறுதியாகிறது. ஒரு கொடிக்கம்பத்தின் அர்த்தமும் அதன் அரசியல் அடையாளமும் குறித்து அவர்கள் பேசும் இந்த உரையாடல், சி.என்.அண்ணாதுரை முதல் நடிகர் விஜய் வரை உள்ள அரசியல் குறிப்புகளை கொண்டுள்ளதாக இருக்கிறது. இப்படத்தின் வசனங்களை இயக்குநர் ராஜுமுருகன் எழுதியிருக்கிறார். இந்நிலையில், கவுதம் ராம் கார்த்திக் நடிக்கும் "ப்ளடி பாலிடிக்ஸ்" படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.



# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** மரியாதை உயரும் வாரம். நடுத்தரமான நன்மைகள் அடுத்தடுத்து கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டாகும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். வெகுமதிகள் சேரும். உடல்நிலையில் அக்கறை தேவை. சினம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைவழி தொல்லை தீரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. திருப்பங்கள் நிறைந்த வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. கர்ஜனையோடு வலம் வரக்கூடிய காலம். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**தனுசு:** பிரயாணம் பெருமை தரும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். பணவரவு அதிகரிக்கும். தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் அற்புதமான காலம். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்னல்கள் அகலும். குடும்ப தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 7,2,4,8
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**மகரம்:** உன்னதம் நிறைந்த வாரம். உலோகத்தொழில் உயர்வு தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பயணம் லாபம் தரும். எண்ணிய காரியம் கைகூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதார்த்தமான சிந்தனையில் ஏறுமுகம் காணக்கூடிய ஆறுதலான காலமாக அமையும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைவாற்றல் பெருகும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. எடுத்த காரியத்தில் ஏற்றம் கிட்டும். படித்த கல்விக்கு உத்தியோகம் கிடைக்கும். உபயோகமான காலம். புதிய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பூமி சேர்க்கையுண்டு. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அதிகாரம் உயரும். எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**கும்பம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். மகிழ்வான நிகழ்வுகளை சந்திக்கக்கூடிய சந்தோஷமான காலம். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எண்ணிய காரியம் கைகூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். மன உற்சாகம் அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி ஏற்படும். வழக்குகளால் தொல்லை உண்டு. இயந்திர தொழிலால் லாபம் உண்டு. கடன் தொல்லைகள் குறையும். கூட்டுப் பிரார்த்தனையில் மோசடி ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். புண்ணிய ஸ்தலப் பயணம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நல்லோர் நட்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். சிறப்புக்கள் சேரும். தன்மானத்தோடு வாழும் காலம். தயாள குணம் மேலோங்கும். போட்டி, பொறாமைகள் விலகி நன்மைகள் பெருகும். வீரியத்தோடு செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வாராகி அம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R





**மீனம்:** பணிவான பேச்சு அவசியம் தரும் வாரம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். கனத்த வருமானத்தை தவிர்த்துக் கொள்ளும் காலம். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவி வாய்ப்பு வரும். பணியில் உயர்வு உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடும். சொத்துச் சேர்க்கை உண்டு. அறிமுகம் இல்லாதவர்கள் மூலமாக ஆதாயம் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். செல்வமும், புகழும் சேரும். பணியில் கண்டிப்பு அவசியம். கல்விச்செலவு கூடும். வழக்கு முடிவிற்கு வரும். பக்குவமான பேச்சு அவசியம். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மிகையான நன்மை கிடைக்கக் கூடிய மிக அற்புதமான காலம். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். தாய் வழி உறவில் ஆதாயம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V

# பாரதிராஜா அவர்கள் ஒரு திரைப்பட இயக்குநர் மட்டுமல்ல அவர் ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் திகழ்ந்தார்!

## "இயக்குநர் இமயம்" பாரதிராஜாவிற்கு P2P பேரெழுச்சி இயக்கம் புகழ் வணக்கம்!



தமிழ் மண்ணின் மண் வாசனையையும், கிராமத்து மக்களின் வாழ்க்கை உண்மைகளையும், தமிழ் மக்களின் உணர்வுகளையும் வெள்ளித் திரையில் உயிரோட்டமாகப் பதித்த கலை உலகின் மாமேதை, இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களுக்கு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி (P2P people uprising movement) இயக்கம் தனது ஆழ்ந்த மரியாதையையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பாரதிராஜா அவர்கள் ஒரு திரைப்பட இயக்குநர் மட்டுமல்லர். அவர் ஒரு பண்பாட்டு அடையாளம். தமிழ் சமூகத்தின் வாழ்வியல், காதல், போராட்டம், உறவுகள், மண்ணின் பெருமை ஆகியவற்றை தனது படைப்புகளின் மூலம் தலைமுறைகளுக்கு எடுத்துச் சென்ற ஒரு கலைப் போராளி.

தமிழ் இனத்தின் உரிமைகள், தமிழர் அடையாளம் மற்றும் ஈழத் தமிழர் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் வெளிப்படுத்திய உறுதியான குரல், தமிழ் மக்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும். கலைஞராக மட்டுமன்றி, தமிழர் நலனுக்காக அக்கறை கொண்ட சமூகப் பொறுப்புள்ள தமிழராகவும் அவர் திகழ்ந்தார். தேசியத்தலைவரை நேரில் சந்தித்த இயக்குநர் இமயம் அவர்கள் "தமிழினத்தின் ஒப்பற்ற தலைவனை கண்டேன் " என்று உலகத்திற்கே அறிவித்தார். ஈழத் தமிழர் விடுதலையில் தீராத அவா கொண்ட இவரின் மறைவு ஈழ தமிழினத்திற்கும், உலக தமிழினத்திற்கும் பேரிழப்பாகும்.

அவரது கலைப் பயணம் தமிழ் சினிமாவின் வரலாற்றில் அழியாத தடமாகும். அவர் உருவாக்கிய படைப்புகளும், அவர் விதைத்த சிந்தனைகளும், வருங்கால தலைமுறைகளுக்கு என்றும் வழிகாட்டியாக இருக்கும்.

இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க கலைச் சேவையை நன்றியுடன் நினைவுகூரும் இந்நேரத்தில், அவருக்கு எமது இதயபூர்வமான புகழ் வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

"மண்ணின் மணத்தை திரையில் விதைத்த கலைஞர்
தமிழின் ஆன்மாவை உலகிற்கு எடுத்துச் சென்ற படைப்பாளர்
அவரது பெயரும் புகழும் தலைமுறைகளைத் தாண்டி நிலைத்திருக்கும்."

பாரதிராஜா அவர்களின் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், கலை உலகினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

# NESAN
## 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION. BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)

உதயம் 1575 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 12, 2026

# இவ்வருட கனடா "உதயன்" சர்வதேச விருது விழாவில் 6 உயரிய விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள்!















கடந்த 06-06-2026 அன்று சனிக்கிழமை கனடா ஸ்கா-புறுறோ நகரில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த இவ்வருட கனடா "உதயன் சர்வதேச விருது விழாவில் 6 உயரிய விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள் பல பிரமுகர் நின்றிருந்த மேடையில் தங்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். மண்டபம் நிறைந்த விழாவாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரசபைகளின் உறுப்பினர்கள் என பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இலஙகையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பயனுள்ள உரையொன்றையும் ஆற்றினார். விழாவிற்கு முனைவர் வாசுகி நகுலராஜா தலைமை தாங்கினார். சிறப்புரையை அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் ஆற்றினார். (தொடர்ச்சி 13ம் பக்கம்)



# இலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழ் ஹிப் ஹாப் பாடகர் சங்கீத்சனை உடனடியாக விடுதலை செய்யுமாறு ஒன்றாரியோ அமைச்சர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தல்

ஒன்றாறியோவின் சுகாதார இணை அமைச்சரும், ஸ்காபரோ "ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினருமான அமைச்சர் விஜய் தணிகாசலம், இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 24 வயதான தமிழ் ஹிப் ஹாப் கலைஞர் சங்கீத்சன் கணேஸ்குமார், அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.

சங்கீத்சனின் கைது நடவடிக்கை கலைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் தமிழ் அடையாளத்தின் மீதான நேரடி தாக்குதலாகும் என அமைச்சர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 9ம் பக்கம்)



# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை தனது அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி!

கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசின் உறுப்பினரும் அமைச்சு ஒன்றின் பாராளுமன்றச் செயலாளருமான லோகன் கணபதி அவர்கள் அலுவலகத்தில் எடுக்கப்பட்ட படம் இங்கு காணப்பெறுகின்றது.

கனடாவிற்கு வருகை தந்துள்ள இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு-கிழக்கு-மலையகம் என அனைத்துப் பகுதிகளிலும் வாழும் மக்கள் பிரச்சனைகள் தொடர்பாக தொடர்ச்சியாக குரல் எழுப்பி வரும் மனோ கணேசன் அவர்களை தனது உத்தியோகபூர்வமான அலுவலகத்திற்கு அழைத்து கௌரவித்த லோகன் கணபதி எம்பிபிஅவர்கள் அவருக்கு ஒன்றாரியோ முதல்வரின் வாழ்த்து மடலை வழங்குவதை காணலாம். படத்தில் வர்த்தகப் பிரமுகர் ராஜா காணப்படுகின்றார்.
(தொடர்ச்சி 10ம் பக்கம்)



# இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட வைத்திய நிபுணர் கலாநிதி ஜெயக்குமாரன்!

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது வைத்திய நிபுணர் கலாநிதி ஜெயக்குமாரன் தெரிவித்துள்ள தகவல் அதிர்ச்சியை தந்துள்ளது என பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்!

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற நிலையில் அவர்களுக்கான சிகிச்சை வளங்களில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என புற்றுநோய் வைத்திய நிபுணரும் தேசிய புற்றுநோய்யல் நிறுவன ஆலோசகரமான வைத்திய கலாநிதி நடராஜா ஜெயக்குமாரன் தெரிவித்தார்.



10ம் திகதி அன்று புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் விடம்பட்ட மறைந்த பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த நிகழ்வில் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புற்றுநோய் இலங்கையில் மட்டுமல்ல உலகத்தில் உள்ள பல நாடுகளில் தாக்கம் அதிகரித்துள்ள தன்மையை கொண்டுள்ளது.

இந்தப் புற்றுநோய் உருவாவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற நிலையில் பொதுவாக உணவுப் பழக்கங்கள் இந்த நோய்க்கு ஆரம்ப கர்த்தாவாக அமைகிறது. (தொடர்ச்சி ம் பக்கம்)